Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 7 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 17 (24.10.2002) வியாழக்கிழமை இதழ் : 24






- கூட்டுச் செயலணிக் குழுவில் பாலசிங்கம், பீரிஸ்
- ஏற்றுக்கொள்ளப்படமுடியாத உயர் பாதுகாப்பு வலயம்
- கடற்படையின் கெடுபிடிகளுக்குக் கண்டனம்
- மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உறுதி செய்தல்
- சர்வதேசத்திடம் நிதியைப் பெறுவது எப்படி ?

# பிரபாகரன் - நோர்வேக் குழுவினர்

# பல விடயங்கள் விரிவாக ஆராய்வு!

## மூன்று மணிநேரம் நீடித்தது பேச்சு

(கிளிநொச்சியிலிருந்து கணேஷ், லிவிங்ஸ்ரன்)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நோர்வே தூதுக் குழுவினர் நேற்று நடத்திய சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக மிக ஆழமாக ஆராயப்பட்டுள்ளது.**

தலைவர் பிரபாகரனுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம், ஆகியோரும் நோர்வேத் தூதுக் குழுவின் தரப்பில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலல்கிசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க், அமைச்சரின் உதவியாளர் பிரட்ஸ்கர் ஆகியோரும் நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றினர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய சந்திப்பையொட்டி கிளிநொச்சியில் கடும் பாதுகாப்பு

(கணேஷ், லிவிங்ஸ்ரன்)

அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த சூழலிலேயே நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நோர்வே தூதுக்குழுவினர் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 9 மணிமுதல் நண்பகல்வரை நீடித்த மேற்படி பேச்சுவார்த்தையை ஒட்டி கிளிநொச்சி நகரில் அதி உச்ச நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (10ஆம் பக்கம் பார்க்க)



## அடுத்த கட்டப் பேச்சுக்களில் தமிழ்ச்செல்வனும் பங்கேற்பார்

(கிளிநொச்சி)

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்ளவிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்பவர்களான அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சில பேருக்கு எதிலயும் குதர்க்கந்தான் பாருங்கோ...

## கண்காணிப்புக் குழுவுக்கு கூடிய அதிகாரம்; வழங்குமாறு புலிகள் தரப்பு கோரிக்கை

(கிளிநொச்சி)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும்படி விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே தூதுக் குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு யுத்த நிறுத்த மீறல்களை தடுத்து நிறுத்துவதற்கான எதுவித அதிகாரங்களும் வழங்கப்படவில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே குழு கொழும்பு திரும்பியது

(கொழும்பு நிருபர்)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முடித்துக் கொண்ட நோர்வேத் தூதுக்குழுவினர் நேற்று மாலை கொழும்பு திரும்பினர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே குழு சந்திப்பை ஜனாதிபதி தவிர்த்தார்!

(கொழும்பு நிருபர்)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான சமாதானத் தூதுக்குழுவை ஜனாதிபதி சந்தித்துப் பேச நேற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் இறுதி நேரத்தில் அச்சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது.

வன்னியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச நோர்வேத் தூதுக்குழு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. எனினும் ஜனாதிபதி

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் தொழில் மலர், சிங்களப் பத்திரிகையாளர் பேச்சு

# தமிழனுக்கென அரசு அமைக்க புலிகளால் மட்டும்தான் இயலும்

## பல்கலைக்கழக கருத்தரங்கில் திருமாவளவன் உரை



தமிழன் தமிழையும் தமிழ் மண்ணையும் காப்பாற்ற வேண்டுமானால் அவனின் கையில் ஆட்சி வரவேண்டும் என இரா.திருமாவளவன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் 'உலக அரங்கில் தமிழ்' என்ற கருப்பொருளில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் - எவன் ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றானோ அவனது மொழிதான் வலிமை மிக்கதாகக் காணப்படும். அந்த வகையில்தான் உலகெங்கிலும் ஆங்கில மொழி செல்வாக்குச் செலுத்துவதனை காணலாம்.

இன்று தமிழன் தமிழைப் பேசுவதற்கு வெட்கப்படுகின்றான். மீறி ஒருவன் தூய தமிழில் கதைப்பான் என்றால் அவனை கீழ் மட்டத்தவனாக பார்க்கும் பண்புகளையும் தமிழன் கொண்டிருக்கிறான். இந்தியாவில் இன்றும் நாலாயிரம் ஆண்டுகள் போனால் அங்கு ஆங்கில அடையாளத்தை அழித்துவிட முடியாது. அந்த அளவுக்கு ஆங்கிலம் வலிமை பெற்றுவிட்டது.

சிலர் இருக்கிறார்கள் இடையிடையே ஆங்கில வார்த்தைகளை சேர்த்துக் கொள்வார்கள். அதனைத்தான் அவர்கள் பெருமையாகவும் கருதுகின்றார்கள். இவர்களுக்கு சரியான தமிழில் பேசத் தெரியாது. ஆங்கிலமும் பேசத் தெரியாது. இதனை மாற்றுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். முன் வருவதென்றால் மிகுந்த வலிமை வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

பேரினவாதம் என்று சொல்லிக் கொண்டும் சிங்கள அரசுடன் போரிட்டு தோல்வியடையாமல் பேச்சுவார்த்தை மேடைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அழைத்திருக்கின்றார்கள். என்றால் அது அவர்களின் வலிமை மிக்க தலைமை என்றுதான் நான் நம்புகின்றேன்.

ஒரு பேரினவாதத்தின் அரசை கலக்கியடித்து பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்த பெருமைக்கு விடுதலைப் புலிகளின் தலைவரின் தளராத நம்பிக்கையும் வலிமையுமாகும் என நான் நம்புகின்றேன்.

ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகப் போராடும் தலைவர் பிரபாகரனின் வீரம் தமிழ் நாட்டரசுக்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை. குறைந்த பட்சம் நீதி, நியாயம், பற்றிச் சிந்தித்து செயல்படுகின்ற இயல்பிலாவது தமிழ் நாட்டில் உண்மைகளும் வந்தால் போதும் என நினைக்கின்றேன்.

ஆனால் அவர்கள் அவ்வளவிற்கு இல்லை. நாட்டை எவனும் ஆளட்டும், பதவியும் பவிசும் எம்முடன் இருந்தால் போதும் என எண்ணும் தமிழர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் தமிழைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

நான் கேட்பது என்னவென்றால் அனைத்து தமிழருக்குமான அரசு அமைய வேண்டும். தமிழைக் காக்க வேண்டும். உலக அரங்கில் தமிழைத் தூக்கி நிறுத்த வேண்டும். இதனைச் செய்யக்கூடிய வல்லமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும்தான் உண்டு. தமிழ் வாழ வேண்டும் என்றால், தமிழன் வாழ வேண்டும் என்றால், தமிழனுக்கு என்று ஒரு அரசு அமைய வேண்டும். அது விடுதலைப் புலிகளால் மட்டும்தான் முடியும். அவர்களால்தான் தமிழையும் தமிழனையும் காப்பாற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சஞ்சிகை வெளியீடு

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, இந்துப் பண்பாட்டுக் கழகம் வெளியிடும் "மெய்ப்பொருள்" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பி.ப. 2 மணிக்கு கழகத்தலைவர் செ.ரூபகுமார் தலைமையில் புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து சிறப்பிப்பதுடன், ஆசியுரையை யாழ்.பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயரும், தொடக்கவுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கமும், நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர். (62)

## யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் இரண்டாவது நாளாகவும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி உயர்தர மாணவர்கள் நேற்று முன்தினம் காலை முதல் தமது வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர். பாடசாலை நிர்வாகச் சீர்கேட்டை வெளிக்கொணர்வதற்காகவும் தட்டிக் கேட்கும் மாணவர்கள் நிர்வாகத்தால் கடுமையாகத் தண்டிக்கப்படுவதை கண்டிப்பதற்காகவும் தாம் இப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்ததாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையில் இட நெருக்கடி நிலவும் போதும் சில கட்டடத் தொகுதிகளை சுற்றுலாப்பயணிகளுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் பாடசாலை கணினிகளை வெளியார் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மாணவர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.



இதேவேளை நேற்று முன்தினம் காலை இராசசேகரம் செந்தூரன் எனும் உயர்தர மாணவன் ஆசிரியர் ஒருவரால் கடுமையாக தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரண்டாவது நாளாகவும் இம்மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மாணவர்களை முறையற்ற வகையில் தாக்கும் ஆசிரியர் ஒருவரையும் அதிபரையும் இடமாற்றம் செய்யும் வரை தமது பகிஷ்கரிப்புத் தொடரும் எனவும் மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (லி,54,65,25)

## ரணிலின் சமாதான முயற்சிகளை ரொனி டி மெல்லும் வரவேற்கிறார்

(கொழும்பு)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் சமாதான வழிமுறைகளை நான் வரவேற்கின்றேன். சமாதானம் ஏற்பட்டால் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொனி டி மெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜனநாயக வழியில் நாடு சென்றால் நாட்டில் சமாதானம் நிலவும். விவசாயம், சுகாதாரம், கல்வி ஆகியவையும் முன்னேற வேண்டுமானால் சமாதானம் அவசியம். இதனால் தற்போது வடக்கில் இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதை ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்தி வருகின்றார் என்றார்.

### துறைமுகம் செயலிழப்பு

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலிலிருந்து பொருட்களை இறக்கும் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

சில தினங்களாக வடமராட்சிப் பகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக - வசதிகள் குறைந்த நிலையில் பொருட்களை இறக்குவது ஆபத்தானதாக இருப்பதால் பொருட்களை இறக்கும் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (15)

## சாவகச்சேரி கமநல சேவைப் பிரிவில் 934 ஹெக்ரேயரில் பயிர்செய்ய முடியவில்லை

(மீசாலை)

சாவகச்சேரி கமநல சேவைப் பிரிவில் இவ்வருடம் காலபோக நெற்பயிர்ச்செய்கை 934 ஹெக்ரேயரில் மேற்கொள்ளப் படவில்லை என விவசாயப் போதனாசிரியர் சி.துரைராசா, பெரும்பாக உத்தியோகத்தர் சொ.சத்தியேந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

இவ்விதைப்பு மேற்கொள்ளப் படாத பகுதிகளில் கண்ணிவெடி அச்சுறுத்தல் காணப்படுவதனாலும், மிருசுவில், நுணாவில் ஆகிய வயற் பகுதிகளைப் படையினர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தியுள்ளதாலும் மற்றும் உரிய காலத்தில் மழையின்மை போன்றவற்றினால் 934 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் இவ்வருடம் விதைப்பு மேற்கொள்ளப்படவில்லை.

சாவகச்சேரி கமநல சேவைப் பிரிவில் 2590 ஹெக்ரேயரில் 1656 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மட்டுமே இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (25)

### மகரகம போட்டிக்கு கலாசாலை மாணவர்களும்

அகில இலங்கை ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெறவிருக்கின்ற தடகளப் போட்டி மற்றும் பெரு விளையாட்டுப் போட்டி கள் மகரகமவில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக கோப்பாய்,பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை மாணவர்களில் இருந்து தெரிவாகிய விளையாட்டு வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (83)

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய செவ்வாய்க்குற்றமற்ற 28 கிரகபாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கும், 32 வயதுடைய செவ்வாய்க்குற்றமற்ற 421/4 கிரகபாவமுடைய பயிற்றப் பட்ட ஆசிரியருக்கும் படித்த தகுதி வாய்ந்த மணமகள்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு குடும்ப விவரங்களுடன் தொடர்பு -

விளம்பர இல. 02, மே/பா. நமது ஈழநாடு (019)

## கரணவாய் வீதி விபத்தில் மூவர் கடும் காயம்!

(வடமராட்சி)

வீதியைக் கடக்க முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கரணவாய் புறாப்பொறுக்கி. ஆலடியில் நடைபெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான யோசப்பிள்ளை அஸ்வின் (வயது 33) நெல்லியடி, முருகேசு ஜெயரூபன் (வயது24) சரசாலை தெற்கு ஆகியோரும் வீதிக்கு குறுக்கே சென்றவரான கரணவாய் மேற்கைச் சேர்ந்த எம்.தர்மலிங்கம் (வயது47) என்பவரும் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (23)

### மகாஜனாவில் பரிசளிப்பு விழா

(மருதனார்மடம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் ஐயரத்தினம் நினைவு நாளும், கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் 29ஆம் திகதி காலை 9மணிக்கு அதிபர் சுந்தரலிங்கம தலைமையில் நடைபெறவுள்ளது.(89)


✻ தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் ✻ அடையாள அட்டை கவரிடுதல் ✻ 63 வருட றைகிளீனேர்ஸ்

மூன்றும் இணைந்த சேவை நாடுங்கள்

சன்லைற் றைகிளீனர்ஸ்

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

கிளை - சன்லைற் மல்ரி சேவிஸ்
சன்லைற் தொலைத் தொடர்பு சேவை
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

T.P. 2223871
2222741


## சிறுப்பிட்டிப் பகுதிக்கு இன்னமும் மின்சாரம் இல்லை

சிறுப்பிட்டிப் பகுதிக்கு இது வரை மின்சாரம் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். மின் கம்பங்கள் நடப்பட்டு மின் கம்பி இணைப்பு வேலைகள் இடம் பெற்று பல மாதங்களாகியும் இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் மின்சார சபை மேற்கொள்ளவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல தடவைகள் மின்சார சபையுடன் தொடர்பு கொண்ட போதும் எதுவித பயனும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (96)

### கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

தேவகுமாரி, மன்மத்ராஜா என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.


அல்டி எலக்ரோனிக்ஸ்

ரீவி, டெக், றேடியோ, வீடியோ CD பிளேயர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், கணனிகள், கணனி உதிரிப் பாகங்கள், அன்ரனா பூஸ்ரர் வகைகள் மற்றும் பொருட்களுக்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

அல்டி எலக்ரோனிக்ஸ்

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# சிக்கலான இனப்பிரச்சினைக்கு படிப்படியாகவே தீர்வு காணலாம்



## தமது முயற்சிகள் குறித்து நோர்வே பிரதி அமைச்சர் ஹெல்கிசன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப்பிரச்சினை மிகவும் சிக்கலானது. மிகக் கவனமானதும் படிப்படியானதுமான அணுகுமுறைகள் (**careful & gradual manner**) மூலமே தீர்வுகாண முயற்சிக்கிறோம் என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் யாழ்ப்பாண செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

இரு தரப்புக்களினதும் ஆயுதங்கள் மௌனமாக இவ்வளவு காலமும் இருப்பதே தமக்குக் கிடைத்த முதலாவது நல்விளைவு என்பதைச் சுட்டிக்காட்டிய ஹெல்கிசன், ஒவ்வொன்றாக, மிக மிகக் கவனமாக, படிப்படியாக நோர்வே தனது பணியை ஆற்றுகிறது எனத் தெளிவுபடுத்தினார்.

இன்னமும் பல்வேறு சமூகத்தினர் மத்தியில் ஆழமான குரோதங்களும் சந்தேகங்களும் நீங்கவில்லை என்பதைத் தாங்கள் உணர்வதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம், விடுதலைப்புலிகள், நோர்வே ஆகிய தரப்பினர் மாத்திரம் சமாதான நடவடிக்கைகளுள் இறங்கி நின்று செயலாற்றினால் போதாது என்று கூறிய நோர்வே அமைச்சர்- சகல உள்ளூர் அரசியல்வாதிகள், சாதாரண மக்கள், சமூகங்களின் பல்வேறு நிலையிலுள்ள அமைப்புக்கள் எனச் சகலரும் சமாதான முன்னெடுப்புக்களில் சாதகமான பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து அமைக்கவுள்ள கூட்டுச் செயலணிக்குழு பற்றிக் குறிப்பிட்ட ஹெல்கிசன், இன்னமும் இதுபற்றிய கட்டமைப்பு வரைபுகள் வரையப்படவில்லை என்றும் இது பற்றிய பேச்சுக்களை விடுதலைப் புலிகள், அரசாங்கம் ஆகிய தரப்புடன் தொடர்வதாகவும் கூறினார்.

முன்னதாக- நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணச் செயலகத்தை நோர்வேயின் சமாதான உயர்மட்ட தூதுக்குழு வந்தடைந்தது.

இத்தூதுக்குழுவுக்கு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமை தாங்கினார். இவருடன் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் ஆகியோரும் வேறு இரண்டு நோர்வே நாட்டு தூதரக அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இவர்களை வரவேற்று அரசாங்க அதிபரின் மாநாட்டு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம்.

அங்கு அவர்களை வரவேற்று உரைநிகழ்த்திய மேலதிக அரசாங்க அதிபர், நோர்வேயின் உயர்மட்ட தூதுக்குழு யாழ்ப்பாணம் விஜயம் செய்வதையிட்டு தாம் பெருமையடைவதுடன் பாராட்டும் நன்றியும் தெரிவிப்பதாகக் கூறினார்.

அதனையடுத்து மாநாட்டில் பங்குபற்றிய யாழ்.மாநகரசபை முதல்வர், அரசாங்கத் திணைக்களத தலைவர்கள் ஆகியோர் தத்தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்து உரையாற்றினர். சர்வதேச செஞ்சிலுவை சங்கப்பிரதிநிதிகள், ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பிரதநிதிகள் , ஜி.ரி.சற். உள்ளிட்ட வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அங்கு பார்வையாளர்களாக சமுகமளித் திருந்ததுடன் தமது அவதானங்களையும் கருத்துக்களையும் வெளியிட்டனர்.

# கச்சாயில் 5 அடி நீள முதலை பிடிபட்டது

(சாவகச்சேரி)

கச்சாய் பகுதியில் நீண்டகாலமாக உலாவித்திரிந்த சுமார் 5 அடி நீளமான முதலை ஒன்று அவ்வூர் மக்களால் மடக்கிப் பிடிக்கப் பட்டது.

கேணி ஒன்றில் இருந்து பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் வெளியேற்றப்பட்ட முதலையை பெருமளவு மக்கள் பார்வையிட்டனர். (29,25)

# பதில் பொலிஸ்மா அதிபராக காமினி ரந்தெனிய

பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பொலிஸ் அதிபர் காமினி ரந்தெனிய நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் மா அதிபர் ரி.ஈ. ஆனந்த ராஜா இந்தியாவுக்கு சென்றுள்ளதால் அவரின் இடத்துக்கே ரந்தெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

# விபத்தில்காயம்

(அச்சுவேலி)

கடந்த செவ்வாய் அன்று பிற்பகல் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.அச்சுவேலி தோப்பு பகுதியில் நடந்த மேற்படி விபத்தில் ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த தியாகராஜ சர்மா (வயது 58) என்பவரே காயமடைந்தவராவார். (55)

# போலியோ சொட்டு மருந்து 26ஆம் திகதி வழங்கப்படும்

(வலி.வடக்கு)

தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இரண்டாவது சுற்று போலியோ சொட்டு மருந்து வழங்குதல் நாளை மறுதினம் நடைபெற உள்ளது.

முதல் சுற்று போலியோ சொட்டு மருந்து வழங்குதல் கடந்த செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம் பெற்றது.

தற்போது இரண்டாவது சுற்று மருந்து வழங்கப்பட உள்ளது.

மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ள 36 நிலையங்களில் வைத்து இம்மருந்து வழங்கப்படும்.

ஐந்து வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் இப்போலியோ சொட்டு மருந்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பெற்றோர் குறித்த நிலையங்களுக்கு தவறாது சென்று தமது குழந்தைகளுக்கு இம்மருந்தை பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதார அதிகாரிகள் கோரியுள்ளனர். (105)

# யாழ்.இந்து ஆரம்பபாடசாலையின் பெற்றோர் தினவிழா

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பெற்றோர் தினவிழா வரும் 27ஆம் திகதி பகல் 9.00 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். விசேட கலைநிகழ்வுகளும் அன்று இடம்பெறவுள்ளன. (62)

# பலஸ்தீனம் போலன்றி இலங்கையில் தீர்வுக்கு கூடிய கவனம் வேண்டும்!

## -நோர்வே தூதுக்குழு மத்தியில் வேலணை உதவி அரச அதிபர்-

(யாழ்ப்பாணம்)

பலஸ்தீன விவகாரத்தை ப் போலின்றி இலங்கையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நோர்வே கூடிய கவனம் செலுத்த வேண்டும் என வேலணைப் பிரதேச உதவி அரச அதிபர் ரட்ணம் தெரிவித்தார்.

யாழ். செயலகத்திற்கு வருகை தந்த நோர்வே குழுவினருடனான கலந்துரையாடலின் இறுதியில் முறைப்படியான நன்றிகளைத் தெரிவிப்பதற்கு முன்னர், நோர்வேயின் வேறு சமாதான முயற்சிகள் தொடர்பான அனுபவங்களையும் உதவி அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.

பல சர்வதேச சமாதான முயற்சிகளுக்கு உதவிய அனுபவம் நோர்வேக்கு உள்ளது என்றும் இவ்விடயத்தில் நோர்வே அனுபவம் நிறைந்த நாடு என்றும் பாராட்டிய உதவி அரச அதிபர், நோர்வே மத்தியஸ்தம் மூலம் உருவாக்கப்பட்ட இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானம் உடைந்து தூர்ந்து கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

ரட்ணத்தின் உரையை விதார் ஹெல்கிசனும், எரிக்சொல்ஹெய்மும் உணர்வுபூர்வமான முகபாவனைகளுடன் தலையசைத்தபடி நன்றாகக் கிரகித்துக் கேட்ட வண்ணமிருந்தனர்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தற்போதைய இக்கட்டான நிலைமை, பலஸ்தீன மக்களின் தற்போதைய இக்கட்டான நிலைமை என்பவற்றை, தான் வாசித்தறிந்த விடயங்களுக்கு ஊடாக விபரித்த வேலணை உதவி அரசாங்க அதிபர், இலங்கை விடயத்தில் பலஸ்தீனம்போல் அல்லாமல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு சரியான முறையில் வகுக்கப்படுவதில் நோர்வே கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# குடும்பநல சேவை உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது!

(நமது நிருபர்)

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில்- தமிழ்மொழி மூல குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக-விவாகமாகாத இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுதராதர (உ/த) விஞ்ஞான பாடங்களில் குறைந்தது ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட-மூன்று பாடங்களில் சித்தியுடன், க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஐந்து திறமைச் சித்திகளுடன் இரண்டு' தடவைகளிற்கு மேற்படாத தடவைகளில் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பங்களை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில், செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடக்கு- கிழக்கு மாகாணம், நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் விபரங்கள் தேவைப்படுவோர் "நமது ஈழநாடு" அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்று நிருபத்தைப் பார்வையிடலாம்.

# சீருடையணிந்தோரின் தாக்குதலில் ஒருவர் பலி; வலஸ்முல்லயில் சம்பவம்

(கொழும்பு)

இராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்த கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் மரணமானார். அவரின் சகோதரி பலத்த காயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் வலஸ்முல்ல என்ற இடத்தில் இடம்பெற்றது. மரணமானவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

தாய் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வேளையிலேயே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இவரின் மனைவி இரண்டு வருடங்களாக வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புனரமைக்கப்பட்ட நூலகத்திற்கும் நோர்வே குழுவினர் விஜயம்!



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நோர்வே உயர்மட்ட தூதுக்குழு நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டரை மணிக்கு புதிதாக புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு விஜயம் செய்தனர்.

அங்கு யாழ்ப்பாண மாநகர முதல்வர் செல்லன் கந்தையன், மாநகர சபையின் உறுப்பினர்கள், மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் தூதுக் குழுவினரை வரவேற்று, புதிய கட்டட அமைப்புக்களையும் வேலைத்திட்டங்களைப் பற்றியும் விளக்கிக் கூறினார்கள்.

அதனையடுத்து அங்கு ஒரு கூட்டமும் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய மாநகர முதல்வர் செல்லன் கந்தையன், பொது 'நூல்நிலையம் எரிக்கப்பட்ட சூழ்நிலைகளையும் எரிக்கப்பட்ட நூல் நிலையத்திலிருந்த முதன்மையான, பெறுமதியான நூல்கள் இழக்கப்பட்டதையும் விபரித்தார்.

தொடர்ந்துஅங்கு உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் சுபத்திரன், தமிழ்ச்சமூகத்தினர் கல்வியாளர்கள், கல்விமான்களாகத் திகழ்வதைத் தடுக்கும் பொருட்டே இந்நூல்நிலையம் 1981இல் எரித்துச் சாம்பலாக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அங்கு புளொட் சார்பில் உரை நிகழ்த்திய இருதயநாதன்- சகல அரசியல் கட்சிகளும் பங்காற்றக்கூடிய ஒரு சமாதான சூழலைத்தாம் வரவேற்பதாகத் தெரிவித்தார்.

அங்கு பதிலுரை நிகழ்த்திய நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் ஹெல்கிசன், "யாழ்.நூல் நிலையம் எரிக்கப்பட்டமை ஒரு வரலாற்று ரீதியான , கலாச்சார ரீதியான துயரமாகும். இடர்களின் மத்தியிலும் இந்நூல் நிலைய்ம் மீளக்கட்டப்பட்டு நிமிர்ந்து நிற்பது, உங்கள் வரலாறும் கலாச்சாரமும் நிமிர்ந்து நிற்கும் என்பதற்கான குறியீடாகவே அமையும் உங்களுக்கான நல்வாழ்வின் ஆரம்பமும் ஆகும்" என்றார்.

# வடபகுதி சமுர்த்தி நடவடிக்கைகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை!

## திறைசேரியைக் குற்றம் சாட்டும் ஆணையாளர்

(கொழும்பு)

அடுத்த வருடம் வடக்கில் சமுர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 10 லட்சத்து 890 ரூபா மட்டுமே தமக்குக் கிடைத்திருப்பதாக சமுர்த்தி ஆணையாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் வாழும் மூன்று லட்சத்துக்கு அதிகமான சமுர்த்தி பயனாளிகளுக்கு இது போதுமானதல்ல என்றும் மேலும் தெரிவித்தார்.

போதிய நிதி ஒதுக்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்தும், இதுவரை திறைசேரி எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

# அடையாள அட்டை விண்ணப்பத்தை தாமதமின்றி அனுப்புமாறு அறிவுறுத்தல்

க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை தாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விஜயரணசிங்கா தெரிவிததுள்ளார்.

அடையாள அட்டைகளை வழங்கும்போது பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆனாலும் விண்ணப்பங்கள் தாமதமாக கிடைக்கும் பட்சத்தில் அடையாள அட்டைகள் விரைவாக அனுப்பி வைக்கப்படும் என தாம் உறுதியாகச் சொல்ல முடியாது என பாடசாலை அதிபர்கள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அவர் தெரிவித்துள்ளார்.

# பட்டாசுத் தொழிற்சாலையில் விபத்து இந்தியாவில் 23 தொழிலாளர் பலி!

உலகவலம்

## தீபாவளியையொட்டிய உற்பத்தி அதிகரிப்பால் சம்பவம்

(ஹைதராபாத்)

பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக தென்னிந்தியாவில் பல்வேறு இடங்களில் விபத்துக்கள் நடைபெற்றுள்ளன. இவ்விபத்துக்களில் குறைந்தது 23 தொழிலாளர்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

தென்னிந்திய மாநிலங்களில் ஒன்றான ஆந்திர பிரதேசத்திலுள்ள ஹைதராபாத் நகரில் வணிக நெருக்கடி மிகுந்த பகுதியில் நடுவே பட்டாசுகள் சேமித்து வைத்திருந்த களஞ்சியப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது பதின்மூன்று தொழிலாளர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இத் தீ விபத்துப் பற்றிக் கூறிய ஹைதராபாத் பொலிஸார்- பட்டாசுக் களஞ்சியத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக இவ்விபத்து நடைபெற்றிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை - பட்டாசுக் களஞ்சியத்தின் உரிமையாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மனிதக் கொலைகளுக்குக் காரணமானவர் எனவும் அவர் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

மேலும்- பட்டாசுக் களஞ்சியத்தின் கொள்ளளவு சக்திக்கு மேலதிகமாகக் களஞ்சியப்படுத்தியதால் இத் தீ விபத்து நடந்திருப்பதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக விசாரணை நடத்திய பொலிஸார் கருத்துத் தெரிவித்தனர்.

தீபாவளிப் பண்டிகையையொட்டி பட்டாசு தயாரித்தல் குடிசைக் கைத்தொழிலாகப் பரவலாகக் காணப்படுவதால்- தீ மற்றும் வெடிவிபத்துக்



ஒளித் திருநாளில் அதிகரிக்கும் சாவுகள்.

கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் கூடுதலாகக் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - இன்னொரு வெடி விபத்து, தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் பட்டாசுக் கைத்தொழிற்சாலையில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் 10 தொழிலாளர்கள் இறந்துள்ளதாகவும் 8 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் ஒளித் திருவிழா எனச் சிறப்பிக்கப்படும் தீபாவளித் திருநாள் அடுத்த மாதம் வரவிருப்பதால் பட்டாசுகளுக்கான கேள்வி அடுத்த மாதம் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பால் பட்டாசு தயாரிப்போர் பாரியளவில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அச்சுறுத்துகிறது சினைப்பர் தாக்குதல்; வொஷிங்டனில் ஒன்பது பேர் கோரப் பலி!

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் தலைநகரான வொஷிங்டனையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சினைப்பர் தாக்குதலினால் ஒன்பது பொதுமக்கள் பலியாகியுள்ளனர். இச்சினைப்பர் தாக்குதலானது விசேடமாக சிறுவர்



வீதியை மறித்துச் சோதனையிடும் பொலிஸார்.

களை நோக்கிய அச்சுறுத்தலாக அமைகின்றது என வொஷிங்டன் பொலிஸார் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சினைப்பர் கொலையாளி பெருந்தொகையான பணத்தினை பணயத் தொகையாக வாங்குவதற்காகவே இவ்வாறான சினைப்பர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக ஊகங்கள் வெளிவருகின்றன.

சினைப்பர் கொலையாளி தாக்குதல் நடத்தும் இடங்களில் 'உங்கள் பிள்ளைகளுக்கு எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் பாதுகாப்பு இல்லை' எனச் செய்தி வெளியிடுவதாக மொண்கோமேரி (Montgomery) பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் மூஸ் (Charles Moose) கருத்து வெளியிட்டுள்ளார். மேலும் பத்திரிகையாளர் மாநாட்டில் சார்ள்ஸ் மூஸ், சினைப்பர் கொலையாளிக்கு செய்தி ஊடகங்கள் ஊடாக ஒரு செய்தியையும் வெளியிட்டுள்ளார்.

'சினைப்பர் கொலையாளியாகிய உங்களின் தெரிவுகளைப் பற்றி வெளியாராகிய நாங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். உங்களின் மனநிலையை ஆய்வு செய்வதானால் இலத்திரனியல் சாதனங்கள் மூலம ஆய்வுசெய்வது சாத்தியமானதல்ல. எது எவ்வாறாயினும் நாங்கள் திறந்த மனதுடன் தங்கள் தெரிவுகளை சவாலாக ஏற்கத் தயாராக இருக்கிறோம்' எனக்கூறி தொலைபேசி இலக்கம் மற்றும் தபால் பெட்டி இலக்கம் என்பவற்றைக் கொடுத்துள்ளார்.

இதேவேளை - கடந்த புதன்கிழமை முதல் வொஷிங்டன் நகர் மற்றும் புறநகர்ப்பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு ஏதும் விபரீதம் நிகழலாம் என அச்சம் நிலவி வருகிறது. பாடசாலைப் பகுதிகளுக்குப் பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். ஆனால் பாடசாலைச் சிறுவர்கள் பலத்த அச்சத்தில் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு பஸ் ஓட்டுநரும் துப்பாக்கித் தாக்குதலால் இறந்துள்ளார். எனினும் இம் மரணம் சினைப்பர் தாக்குதலால்தான் நிகழ்ந்தது என உறுதிப்படுத்த முடியவில்லை.

கடந்த 3 மாதங்கள் நடைபெறும் இவ்வாறான தாக்குதலால் உள்ளூர் மக்கள் பெரும் பீதியின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வொஷிங்டன் ஆயர், எல்லா அமெரிக்கர்களையும் இவ்வாறான அசம்பாவிதங்களுக்கு முடிவு காணப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுள்ளார். இத்தாக்குதல் நிகழ்ந்துவருவதால் திடீரெனப் பெரும் வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் பதற்றமும் நிலவி வருகிறது. இக்கொலையாளியின் முதல் ஆறு தாக்குதல்களும் பெருந்தெருக்களின் கடைவைகளில் நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கொலையாளியின் தாக்குதல்கள் அதிகாலை நேரங்களில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## சீனத் தலைவர் செமின் அமெரிக்காவுக்கு விஜயம்

(வொஷிங்டன்)

சீனத்தலைவர் ஜியாங் செமின் அமெரிக்கா வந்துள்ளார். இவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை இந்த வருடத்தில் மூன்றாவது முறையாகச் சந்திக்கிறார்.

தமது சந்திப்பு இரு நாடுகளிடையிலான பரஸ்பர நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எனச் சீனத் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான போர், பொருளாதார சீரமைப்பு என்பவை தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தவுள்ளனர். ஈராக் மற்றும் வடகொரிய விவகாரங்களும் பேச்சில் முக்கிய இடம் வகிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# வெனிசுவெலா ஜனாதிபதிக்கு எதிராக அரசாங்கப் படையினரும் களத்தில்!



ஒரு பக்கம் சாவேஸுக்கு ஆதரவு

(ஹரக்கஸ்)

வெனிசுவெலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸைப் பதவி விலகுமாறு கோரி தலைநகர் ஹரக்கஸில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுடன் வெனிசுவெலா இராணுவத்தினரும் இணைந்துள்ளனர்.

பதினான்கு இராணுவ அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து ஹியூகோ சாவேஸின் ஊழல் அரசாங்கத்தை உடன் அகற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர்.

அதேவேளை- மேற்படி எதிர்ப்பாளர்கள் ஹியூகோ சாவேஸின் இராஜினாமா தேசிய தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ஹியூகோ சாவேஸின் அரசாங்கத்தின் தவறான பொருளியல் திட்டங்களால் மொத்த சனத்தொகையில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் வறுமையில் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- வெனிசுவெலாவின் உபஜனாதிபதி ஜோஸ் விஸ்ஸன்ரேரங்கெள் இராணுவ அதிகாரிகளின் செயற்பாடுகளை மறுதளித்துள்ளார். மேலும்- ஜனாதிபதி சாவேஸ் தனது அலுவலகத்தில் கடமையாற்றுவதாகவும், பெரும்பான்மை இராணுவத்தினர் இச்செயற்பாடுகளை நிராகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் தலைநகர் ஹரக்கஸில் பொது வேலை நிறுத்தத்திற்கு எதிர்ப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். இதுவரை நடந்த பொது வேலை நிறுத்தத்தினால் 300 மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வெனிசுவெலா உற்பத்தித்துறை அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை- வெனிசுவெலா தொழிலாளர் சமாசத்தின் தலைவர் கருத்து வெளியிடுகையில், 85வீதம் மக்கள் சாவேஸ் தனது பதவியை விட்டு விலக வேண்டுமென்றே வேண்டி நிற்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை- தலைநகர் ஹரக்கஸில் 5000 துருப்புக்கள் குவிக்கப்பட்டு நகரின் அமைதியை உறுதிப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது.



மறுபக்கம் ராணுவத்தினரும் எதிர்ப்புக் களத்தில்

இவ்வாறு நாடு பெருங் குழப்பத்திற்குள்ளாகியிருக்கும் வேளையில் ஜனாதிபதி சாவேஸ் - தான் 2007ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கப் போவதாகவும், அடுத்த தேர்தல் ஆர்ப்பாட்டக்காரர் கோருவது போல் உடனடியாக வைக்கப்போதில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை - கடந்த வாரம் ஐரோப்பிய பயணத்தின்போது ஜனாதிபதி சாவேஸ் பயணம் செய்த விமானம் துப்பாக்கித் தாக்குதலிலிருந்து மயிரிழையில் தப்பியது தெரிந்ததே.

# பாலித்தீவில் தாக்குதலுடன் தொடர்பு; மூவர் இந்தோனேசிய பொலிஸால் கைது!

கடந்த வாரம் பாலித்தீவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை - இந்தோனேசியப் பொலிஸார் இம்மூவரும் சில விசாரணைகளுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளதே தவிர, அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்படக்கூடிய தெளிவான ஆதாரங்கள் இன்னும் விசாரணைகளின்போது துலங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - இந்தோனேசியா அரசாங்கத்திற்கு, அவுஸ்திரேலிய அரசாங்கம் விசாரணைகளைத் துரிதப்படுத்த அழுத தம் கொடுத்து வருகின்றனர். அவுஸ்திரேலியப் புலனாய்வுப் பிரிவினரும், அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரும், சந்தேகநபர்களின் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இத்தாக்குதல் சந்தேகநபர்கள் மூவரும் இந்தோனேசிய தீவிரவாத இயக்கமான ஜம்மா இஸ்லாமியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர். அதேவேளை - இத்தீவிரவாத அமைப்பினர் இப்பிராந்தியத்திலிருந்து அவுஸ்திரேலியர்களைத் துரத்த வேண்டும் என்ற நோக்குடனேயே செயற்படுவதாக இந்தோனேசியப் புலனாய்வுப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இம்மாதம் 12ஆம் திகதி நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் 180 அவுஸ்திரேலியர்கள் மரணமடைந்தது தெரிந்ததே.



கடற்கரையில் அஞ்சலி செலுத்தும் அவுஸ்திரேலிய பெண்கள்.

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# குடாநாட்டில் 'நியாப்' திட்டங்கள் திட்டமிட்ட இலக்கை எட்டுமா?

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றத் திட்டங்களிலும் பின்னூட்டல்கள் (Feed back)இடம்பெறுவது குறைவு. இப்பின்னூட்டல் 'நியாப்' திட்டத்திற்கும் அவசியமானது. ஆனால், அவை பற்றிய முயற்சிகள் 'நியாப்' திட்டத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

"வரப்புயர நீர் உயரும்....." என்பது ஔவை அன்று மொழிந்த வாக்கு. இன்று வானம் பார்த்த பூமியாகிய எமக்கு ஒரு அமுத வாக்கு. விவசாயத்தையே நம்பி அதனை ஜீவனோபாயமாகவும் வருமானம் ஈட்டும் தொழிலாகவும் கொண்ட எமக்கு இந்த வரம்புகளின் உயர்வு என்பது யுத்தத்தால் அழிந்து சிதைந்து போயுள்ள எமது பிரதேசங்களுக்கு மிக முக்கியமான தேவையாக மாறிவிட்டது. அது மட்டுமல்ல இன்று அதிகரித்த நீர்ப்பாவனையால் யாழ்ப்பாண நன்னீர் நிலைகள் உவர் நீராக மாறக் கூடிய அபாய நிலையும் தோன்றியுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே நீர்ப்பாசன திட்டங்களை செயற்படுத்துவதும், நன்னீரைத் தேக்குவதும் இன்று எமக்கு மட்டுமல்ல எமது எதிர்கால சந்ததிக்காகவும் அவசிய தேவையாகிவிட்டது.

இத்தகைய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாக நியாப் (NEAAP- வடக்கு, கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம்) காணப்படுகின்றது. இந்த திட்டமானது யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலத்திலேயே தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. இந்த திட்டமானது நீர்ப்பாசன விவசாயத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டாலும் நீர்ப்பாசன விவசாயத்தை அடிப்படையாக கொண்ட ஒரு கிராம அபிவிருத்தி திட்டம் ஆகும்.



தூர்ந்துபோன வாய்க்கால் (படம் - அறிதிரு)

இத்திட்டம் இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொண்டுள்ள செயல் திட்டங்கள் அதற்கான நிதியீட்டங்கள், இத்திட்டங்களில் நிறைவு செய்யப்பட்ட அளவு, இத் திட்டங்களை மேம்படுத்தும் வழி வகைகள் என்பவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மொத்தமாக 100 மையக்கிராமங்கள் (focal villages) இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவுள்ளன. அதற்காக 32.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக வங்கியினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மே மாதத்தில் 7 குளங்களும், 3 உவர்நீர்த் தடுப்பணைகளும் தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது அவற்றுக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளன.

இவற்றில் முதல் 7 திட்டங்களும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினாலும், 3 உவர்நீர்த் தடுப்பணைத திட்டங்கள் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினாலும் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவற்றினைவிட- இந்த வருடத்துக்கான வேலைகளாக மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற 10 திட்டங்களும் வடமராட்சியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட குளங்களின் விபரம் வருமாறு:-

1. விராச்சிக்குளம்
2. கிராய்க்குளம்
3. துவவிக்குளம்
4. ஒந்திராய்க்குளம்
5. வீரகாளி குளம்
6. தாமரைக்குளம்
7. தாளங்குளிக்குளம்
8. சிலிந்தில்குளம்
9. கொட்டுக்கேணிக்குளம்
10. சாளம்பைக்குளம்

இத்திட்டங்கள் தொடர்பில் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் இவ் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் கீழ்காணும் வேலைத் திட்டங்கள் இத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

| குளம்/அணைக்கட்டின் பெயர் | மையக்கிராமம் (Focal village) |
|---|---|
| பொன்னாலை பெரியகுளம் | பொன்னாலை |
| சுவடுவிராய் குளம் | வல்லிபுரம் |
| நெடுங்கிராய் குளம் | கப்பூது |
| தம்பலைக் குளம் | இடைக்குறிச்சி |
| வேடுவன் கண்டி குளம் | நவாலி |
| வேலணைப் பெரிய குளம் | வேலணை கிழக்கு |
| செம்மணிக் குளம் | இருபாலை தெற்கு |
| சம்பலோடை உவர்நீர்த் தடுப்பணை | காரைநகர் வடக்கு |
| குறுக்கு கடல் உவர்நீர்த் தடுப்பணை | புளியங்கூடல் |
| சரவணை உவர்நீர்த் தடுப்பணை | சரவணை |

அட்டவணை - 1

1. நடுத்தர/சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு

-இங்குநடுத்தர நீர்ப்பாசனமானது 500 ஏக்கருக்கு குறைவான பரப்பளவை கொண்ட நிலங்களையும், சிறிய நீர்ப்பாசனம் என்பது 200 ஏக்கருக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட நிலங்களையும் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

2. உவர் நீர்த் தடுப்பணைகளின் புனரமைப்பு

3. கிராமிய விவசாய வீதிகள் அமைத்தல்.

-இந்த வீதிகள் கிறவல் வீதிகளாக அமைவதோடு 3 அல்லது 4 கிலோ மீற்றர் நீளங்கொண்டவையாகவும் காணப்படும். அத்துடன் இவ் வீதியமைப்பு வேலைகளுக்கு, ஒரு கிலோ மீற்றர் தூரம் அமைப்புக்கு ரூபா 450,000 என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

4. குடிநீர் கிணறுகள் அமைத்தல்.

-இதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மையக் கிராமம் ஒன்றுக்கு 1 தொடக்கம் 3 வரையான குடிநீர்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

5. பலநோக்குக் கட்டடம் அமைத்தல்

-இப் பலநோக்கு கட்டடமானது ரூபா 600,000 செலவில் அமைவதாக இருக்கும்.

6. ஜீவனோபாயக் கடன் உதவித் திட்டங்கள்

-இத்திட்டம் ஆகக்கூடுதலாக ரூபா 900,000 ஐ உச்ச எல்லையாகக் கொண்டிருப்பதோடு, ஒருவருக்கான ஆகக்கூடுதலான கடனுதவு தொகை ரூபா 20,000 ஆக இருக்கும்.

மேற்படி திட்டங்களை சமூக மட்டத்தில் வலுவூட்டுவதற்காக (Social Mobilization) தெரிவு செய்யப்பட்ட மைய கிராமங்களிற்கு ஒவ்வொரு சமூக வலுவூட்டாளர் (Social Mobilizer) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் சேவா லங்காவினால் நடாத்தப்பட்டு ஒவ்வொரு கிராமங்களிலும் வலுவூட்டல் வேலைகள் நடைபெறுகின்றன.

2002 ஆம் ஆண்டு 20 மையக் கிராமங்களை மேம்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டுக்கு முதல் 10 திட்டங்களுக்கும் ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் விவசாய சம்மேளனம், கிராமிய அபிவிருத்தி சமூகம் (R.D.S) ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் தொடர்பில் 10 வீத வேலைகள் பொருளாகவோ சேவைகளாகவோ பயனாளிகளால் செய்யப்பட வேண்டும் என்பது இத்திட்டங்களின் ஒரு அமசமாகும். இந்தப் புனரமைப்பு வேலைகள் மக்களுக்கானது. அவர்கள் தங்கள் பொறுப்பை உணரவும் எதிர்காலங்களில் திறமையாக இதனை பராமரிக்கவும் வேண்டும் என்பதும் உலக வங்கியின் நோக்கம் என எடுத்துரைக்கப்படுகின்றது.

இத்திட்டங்களுக்கான நிதியீட்டங்கள் பற்றி நோக்குவோமாயின் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகள், நிதியீட்டம் செய்யப்பட்ட அளவுகள் என்பவற்றை அட்டவணை-2 புலப்படுத்தி நிற்கின்றது.

| திட்டம் | அனுமதிக்கப் பட்ட மதிப்பீடு (ரூபா) | நிதியீட்டம் செய்யப்பட்ட அளவு (ரூபா) |
|---|---|---|
| 1. பொன்னாலை பெரிய குளம் | 2,844,878.75 | 420,000.00 |
| 2. தம்பலைக் குளம் | 1,865,099.98 | 731,028.00 |
| 3. நெடுங்கிராய் குளம் | 2,351,397.28 | 670,903.25 |
| 4. சுவடுவிராய் குளம் | 1,216,875.05 | 503,376.75 |
| 5. செம்மணிக்குளம் | 2,815,102.48 | - |
| 6. வேலணைப் பெரிய குளம் | 1,235,593.80 | - |
| 7. வேடுவன் கண்டிகுளம் | 848,758.40 | - |

அட்டவணை - 2

நியாப் செயல் திட்டம் தொடர்பான விபரங்களை நோக்கிய பின்னர்- இத்திட்டத்தின் செயற்பாடுகளின் செயல்திறன் மதிப்பீடு என்பது மிக முக்கியமானதொன்றாக அமைகின்றது. முதலில் குறிப்பிட்டது போல இத்திட்டம் யாழ். மாவட்டத்துக்கு மிகப்பயனுள்ள திட்டமாகும். ஆயினும் இத்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அவ்வளவாக திருப்திப்பட்டுக் கொள்ள முடியாது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிட்டுக் கூறமுடியும்.

யாழ்.மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டுக்கு முதலில் தெரிவு செய்யப்பட்ட 10 திட்டங்கள் இவ்வருடம் மே மாதத்திலேயே தெரிவு செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது. இவ்வாறு இத்திட்டங்கள் வருட ஆரம்பத்தில் இருந்து 4 மாதங்களின் பின்பே ஆரம்பிக்கப் பட்ட நிலைமையானது- இவ்வருட இறுதிக்குள் இத்திட்டங்களின் பூர்த்தி தொடர்பிலும், திட்டங்களின் வேலையின் தரம் தொடர்பிலும் ஐயங்களை ஏற்படுத்த வழிவகுத்துள்ளது. இதனை விட வடமராட்சிப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 10 திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்காலாண்டு பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இனி இவற்றின் மதிப்பீடுகளுக்கான அனுமதி பெறப்பட்டு, வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய போதிய கால அவகாசம் கிடைக்குமா என்பது எழுந்து நிற்கும் ஒரு கேள்விக் குறியே ஆகும்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் முதலில் தெரிவு செய்யப்பட்ட 10 திட்டங்கள் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் சதவீத பங்கு அட்டவணை - 3 மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

அட்டவணை - 3 இன்படி மே மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 3 திட்டங்கள் மட்டுமே 50% உம், அதற்கு கூடுதல் சதவீதமான வேலைகளை பூர்த்தி செய்ததாக காணப்படுகின்றது. மிகுதி ஏழு திட்டங்களும் இந்தக் காலப்பகுதியில் 50% ஆன வேலைகளைக்கூட பூர்த்தி செய்யாத நிலையானது குறிப்பிடக்கூடிய விடயம். இந்நிலையில் வருடத்தின் இறுதி நான்கு மாதங்களிலும் இத்திட்டங்கள் குறித்த இலக்கை எட்டுவது என்பது இயலாது போகக்கூடும்.

இதனைவிட யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இனி வரும் வருடத்தின் இறுதி மாதங்கள் பருவ மழைக் காலங்கள் ஆகும். இந்நிலையில் மேற்படி திட்டங்களின் வேலைகளை துரிதமாகவும் சிறப்பாகவும் மேற்கொள்ள இயற்கை வழிவிடுமா என்பது முக்கிய பிரச்சினையாக எழப் போகின்றது.

எனவே- இத்திட்டங்களின் வேலைகள் இந்த வருட இறுதிக்குள் 100% இலக்கை எய்துவதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாக இருக்கின்ற நிலைமையானது- இத் திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிட்டு கூறக்கூடிய ஒரு குறைபாடாக காணப்படுகின்றது.

இறுதியாக இத்திட்டங்கள் பின்னூட்டல்களை (Feed Back) கொண்டிருப்பதாக தெரியவில்லை. அதாவது 100% பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள் மூலம் பயன் பெறும் பயனாளிகள் எவ்வளவுக்கு பயன் பெறுகின்றனர் என்பதனைக் கண்டறிவதற்கான திட்டங்கள் எவையும் இத்திட்டங்களில் காணப்படவில்லை.

எனவே- நியாப திட்டங்களைப் பொறுத்தவரையில் தன்னகத்தே கொண்டிருக்கின்ற இத்தகைய குறைபாடுகளைக் களைவதன் மூலமே இத்திட்டங்கள் அதிக பயன் தருவதாக இருக்கும். இக் குறைபாடுகளைக் களைவதற்கான வழிவகைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

ஒவ்வொரு ஆண்டுக்குமான செயல்திட்டங்கள் அந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே செயல்படுத்தப்படுவதன் மூலம்- அந்த ஆண்டுக்கான செயல் திட்டங்களை முழு அளவில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு திட்டங்களும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த பகுதிகளை நிறைவேற்றுவதற்கான காலஎல்லைகள் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் பயன்பெறும் பயனாளிகளின் பலனை அளவிடக்கூடிய பின்னூடல்களுக்கான திட்டங்களை, ஒவ்வொரு திட்டங்களும் கொண்டிருப்பதன் மூலம் இத் திட்டங்களின் வெற்றியினை மதிப்பிட முடியும்.

இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான அனுமதி, மதிப்பீடுகளின் அனுமதி என்பன காலதாமதமின்றி வருட ஆரம்பத்திலேயே வழங்கப்படுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களில் இருந்து பயன் பெறுவதனை உறுதிப்படுத்த ஒரு மேற்பார்வை குழு (MONITORING GROUP) அமைக்கப்பட்டுதல் வேண்டும். இந்த குழுவில் பல்வேறு தரப்பட்டவரும் பங்கேற்க வசதி செய்யப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட நியாப் அதிகாரிகள் இவ்வாண்டிலேயே 2003 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டம் தொடர்பான குளங்கள், உவர்நீர் தடுப்பணைகள் என்பவற்றை தெரிவு செய்வதற்கான வேலைகளில் ஈடுபட்டு இருப்பது ஒரு வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

எது எவ்வாறாயினும்- இந்த நீர்பாசன விவசாய திட்டமானது எமக்கு மிக பயனுள்ள திட்டம் என்பது உண்மையாயினும், இத் திட்டத்தின் செயற்பாடுகளின் வெற்றியிலேயே அதிக பயன் கிடைக்கும் என்பது யதார்த்தமாகும்.

| திட்டம் | பூர்த்திசெய்யப்பட்ட வேலையின் சதவீதம் |
|---|---|
| 1. பொன்னாலை பெரியகுளம் | 40% |
| 2. சுவடுவிராய் குளம் | 60% |
| 3. நெடுங்கிராய்குளம் | 50% |
| 4. தம்பலைக்குளம் | 60% |
| 5. வேடுவன் கண்டி குளம் | 20% |
| 6. வேலணைப் பெரிய குளம் | 10% |
| 7. செம்மணிக் குளம் | 10% |
| 8. சாம்பலோடை உவர்நீர்த் தடுப்பணை | 30% |
| 9. குறுக்கு கடல் உவர்நீர்த் தடுப்பணை | 30% |
| 10. சரவணை உவர்நீர்த் தடுப்பணை | - |

அட்டவணை - 3

- இஜேசுநாயகம் ஜெயசுதன

# வடக்கு தெற்கு வர்த்தகமும் உலக வர்த்தக அமைப்பும்

## North South Trade and World Trade Organisation

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இலண்டனை வதிவிடமாகக் கொண்ட அபிவிருத்தி சிந்தனையாளர் Panos என்பவரின் கருத்துப்படி- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வருடம் ஒன்றுக்கு 60 பில்லியன் டொலர் அளவு உள்ளார்ந்த ஏற்றுமதியினை இழந்து விடுகின்றன என்கிறார். ஏனெனில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பாரிய விவசாய மானியத் திட்டத்தினால், வளர்முக நாடுகளின் விவசாயிகள்- வளர்ச்சியடைந்த நாட்டு விவசாய உற்பத்திகளுடன் போட்டியிட முடியாதுள்ளது. இது மட்டுமன்றி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் துணிகள், ஆடைகள் ஏற்றுமதியும்- வளர்ச்சியடைந்த நாடுகளில் பலதரப்பட்ட தடைகளை எதிர்கொள்கின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாயிகளைப் பாதுகாக்கும் வருமான ஏற்றத் தாழ்வு இடைவெளி பெருகாமல் இருக்கவும், விவசாயத்தை அழிந்து போகாமல் தடுப்பதற்கும்- வழங்கப்படும் மானியங்கள் நிறுத்தப்படுமானால் 3 ஆம் உலக நாடுகள் விவசாயப் பொருட்களை ஏற்றுமதிசெய்து வருடமொன்றுக்கு 60 பில்லியன் டொலருக்கு மேலாக ஏற்றுமதி வருமானமாக திரட்டிக்கொள்ள முடியும் என்பதையே இவர் குறிப்பிடுகிறார்.

தற்போது சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation-ILO) தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் சர்வதேச நிறுவனமாக விளங்குகின்றது. தொழிலாளர் ஒன்றிணைவதற்கான சுதந்திரம், கூட்டாகப் பேரம் பேசும் உரிமை, ஊழியர்களிடையே பேதப்படுத்தாமை, கட்டாய ஊழியத்தின் மீது தடை போன்றவையே ச.தொ.நிறுவனம் உருவாக்கிய முக்கியமான தொழிலாளர் நியமங்களாகும். இவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அது முன்னேற்றம் கண்டுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் உலக வர்த்தக அமைப்பில் தொழிலாளர் நியமங்களை விவாதிப்பதற்கு நிரந்தரமான ஒரு களம் இருக்கவேண்டும் என்று வாதிடுகின்றன. இதன் மூலம் WTO வையும் ILOவையும் இணைக்க முற்படுகின்றன. இதனால் பல ஆசியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் - மேற்குலகின் தொழிலாளர்கள் பற்றிய உண்மையான கவலைகள் எல்லாம் போட்டியிலிருந்து தமது உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதே அல்லாமல், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குழந்தைத் தொழிலாளர் பற்றியதல்ல. அமெரிக்க ஜனாதிபதி வங்காளதேசத்தில் தமது நாடு நடைமுறைப்படுத்திய முன்னோடித் திட்டமொன்றினை உதாரணம் காட்டி, சிறுவர்களை எல்லாம் பாடசாலைக்குச் செல்ல வசதி செய்து கொடுத்து, அவர்களது இடத்தில் பெரியவர்களை வேலைக்கமர்த்தி, அதன் மூலம் ஏற்றுமதி அதிகரித்ததைச் சுட்டிக்காட்டி, குழந்தைத் தொழிலாளர்களை உற்பத்தியிலிருந்து வெளியேற்றுவது சாதகமானது என்கிறார். ஆனால் - அதேசமயம், பாகிஸ்தான் வர்த்தக அமைச்சரோ அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் செலவைக் குறைப்பதற்கு குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தவில்லை. குழந்தைகள் வேலை செய்வது அவர்கள் சாப்பிடுவதற்காக என்று சாடுகிறார். குழந்தைத் தொழிலாளர் மீது அக்கறை கொண்ட வளர்ந்த நாடுகள் வர்த்தகத் தடைகளை நீக்கி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் வர்த்தகத்தைப் பெருக்கி வருமான உயர்வுக்கு வழிகோலினால் குழந்தைத் தொழிலாளர்கள் பெருகமாட்டார்கள்; அவர்கள் தாமாகவே பாடசாலைக்கு போவார்கள் என்றும் கூறுகின்றார்.

அபிவிருத்தியடைந்த நாடுகளோ - மேலும் தடைகளைப் புகுத்தி, வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளை சுரண்ட முற்படுகின்றன. வரலாற்றிலே இன்று வளர்ச்சி கண்ட நாடுகளாக திகழ்கின்ற நாடுகள் அனைத்தும், குழந்தைத் தொழிலாளர்களை ஆரம்பகாலத்தில் பயன்படுத்தியதை மறந்து பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் தமது வளர்ச்சிப்படியின் ஒரு காலகட்டத்தில் செய்தவற்றை, வளர்ந்து வரும் நாடுகள் இன்று செய்கின்றபோது அதற்குத் தடைவிதிப்பது என்ன நியாயமாகும்? 137 நாடுகளின் அங்கத்தவர்களைக் கொண்ட, சுதந்திரமான தொழிலாளர் சங்கத்தின் சர்வதேச கூட்டாட்சியின் (The International Confederation and Free Trade Union) கருத்துப்படி - முதலில் வளர்முக நாடுகளுக்கு தொழில்நுட்ப, சட்ட ஆலோசனைகளும், தொழிலாளர்களுக்கு நீதியும் கிடைக்கச் செய்யவேண்டும். தொழிலாளர் நியமங்களை இறுதிக் கட்டமாகவே கையாள வேண்டுமென்கிறது. இந்தவிடயத்தில் ஆசிய நாடுகளோ - தொழிலாளர் நியமங்களை உலக வர்த்தக அமைப்பிற்குள் கொண்டு வந்தாலும், அதனை தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கமைப்பிற்கு வெளியி



லேயே வைத்திருக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளன.

இன்று உலக வர்த்தகத்தில் முன்னணியில் திகழும் பத்து நாடுகளில் சீனாவைத் தவிர்ந்த ஏனைய ஒன்பது நாடுகளும் வளர்ச்சிகண்ட கைத்தொழில் நாடுகளாகும்.

ஐக்கிய அமெரிக்காவின் மொத்த ஊழியத்தில் மூன்றில் ஒரு பங்கினர் ஏற்றுமதித்துறையிலேயே தொழில் செய்கின்றனர். இதேபோன்றுதான் ஏனைய நாடுகளிலும் மொத்த ஊழியத்தில் குறிப்பிடத்தக்க வீதத்தினர் ஏற்றுமதித் துறையிலேயே தொழில் செய்கின்றனர். எனவேதான் இந்நாடுகள், ஏற்றுமதிகளைப் பெருக்கித் தமது நலன்களை உயர்த்த உலக வர்த்தக அமைப்பினைப் பயன்படுத்துகின்றனவோ என்ற ஐயத்தினை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்தியில் எழுப்பியுள்ளது.

சர்வதேச வர்த்தகத்தை ஒழுங்கமைப்பதில், இன்று வடக்கேயுள்ள மேற்குலக நாடுகளுக்கும் தெற்கேயுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குமிடையில் பல விடயங்களில் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இந்த முரண்பாடுகள் முக்கியமாக தொழிலாளர் நியமம், சூழல் நியமம், புடவைகள், விவசாயம், முதலீட்டுக் கொள்கை, தீர்வைக் குறைப்பு போன்ற பல விடயங்களிலும் காணப்படுகிறது.

தொழிலாளர் நியமங்களைப் பொறுத்த மட்டில், முன்னர் கூறியதுபோல் தெற்குலக நாடுகள் உலக வர்த்தக அமைப்புக்கு வெளியே பேசப்படல் வேண்டும் என்கின்றன. வளர்ச்சிகண்ட வடக்கு நாடுகள் உலக வர்த்தக அமைப்பு தொழிலாளர் பிரச்சினைக்கும் வர்த்தகத்திற்குமிடையிலான தொடர்பினை ஆராய வேண்டும் என்கின்றது. இதேபோன்று - சூழல் நியமங்களைப் பொறுத்தவரையிலும், வடக்கு நாடுகள் உலக வர்த்தக அமைப்பு வர்த்தகத்திற்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பைக் கருத்திற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றன. தெற்கு நாடுகளோ, சூழல் விவகாரம் உலக வர்த்தக அமைப்பிற்கு வெளியே பேசப்படல் வேண்டும் என்கின்றன.

தைத்த ஆடைகள், புடவைகள் ஏற்றுமதியைப் பொறுத்தவரை தெற்கு நாடுகள் தமக்கு வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி அனுமதிப்பங்கினை (Quota) விரைவில் இல்லாமல் செய்து திறந்த வர்த்தகத்தை ஏற்படுத்த வேண்டும், தீர்வைகளைக் குறைக்க வேண்டும் என்று வாதிடுகின்றன. ஆனால் - வடக்கு நாடுகளோ தற்போதுள்ள நிலைமையை மாற்றலாகாது எனவும் அனுமதிப்பங்கினை கட்டங்கட்டமாக நீக்கி 2005ஆம் ஆண்டிலேயே இல்லாதொழிக்க திட்டமிட்டுச் செயற்படுகின்றன.

**இ.நந்தகுமாரன்**
**பீடாதிபதி, வவுனியா வளாகம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

விவசாய ஏற்றுமதிகளைப் பொறுத்த மட்டில் தெற்கு நாடுகள், செல்வந்த நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் பண்ணை மானியங்களை அகற்றி, வறிய நாடுகளின் விவசாயப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்று வாதிடுகின்றன. ஆனால் - செல்வந்த நாடுகளோ, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம பண்ணைகள் கிராமியமக்கள் தொகையை பாதுகாப்பதில் பல்பரிமாணச் செயற்பாட்டினைக் கொண்டிருப்பதால், சிறு பண்ணைகளை எந்தச் செலவிலும் பாதுகாக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றது. ஆனால் - வளர்முக நாடுகளில் விவசாயிகளுக்கான மானியங்களை நீக்க ஆலோசனை வழங்குகின்றனர். பேரினப் பொருளாதார சமமின்மையை நீக்கல் என்ற வகையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மானியங்களைக் குறைப்பதிலேயே சர்வதேச நிதியம், உலக வங்கி என்பவை கவனம் செலுத்துகின்றன என்பது கவனிக்கற்பாலது.

முதலீட்டுக் கொள்கை குறித்து தெற்கு நாடுகள் உலக வர்த்தக அமைப்போடு பேச வேண்டியதில்லை. ஏனெனில், வர்த்தகத்திற்கும் முதலீட்டுக் கொள்கைக்கும் நேரடித் தொடர்பு இல்லை என்ற நிலைப்பாட்டினை அவை கொண்டிருக்கின்றன. ஆனால் - வடக்கு நாடுகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை, நியாயமான அல்லது பாரபட்சமற்ற வகையில் நடத்துவதற்கு உகந்த வகையில், சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

தீர்வைக் குறைப்பினைப் பொறுத்தவரையில் உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கத்திற்கமைய பல பொருட்கள் மீதான தீர்வை குறைக்கப்பட்டு (உ-ம்: விளையாட்டு உபகரணங்கள், விலையுயர்ந்த கற்கள், ஆபரணங்கள், இரசாயனப்பொருட்கள்) இறுதியில் நீக்கப்படல் வேண்டும் என்பது தெற்கு நாடுகளின் நிலைப்பாடாக இருக்கின்றது. வடக்கு நாடுகளைப் பொறுத்தவரை உருகுவே சுற்றுப்பேச்சுவார்த்தைகளை விட்டுவிட்டு, புதிய பேச்சுவார்த்தைகள் உலக வர்த்தக அமைப்பின் கீழ் அகன்ற தளத்தில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் கீழ் தீர்மானங்களை மேற்கொள்வதில், வடக்கு நாடுகள் அக்கறை காட்டுகின்ற அதேவேளை - தெற்கு நாடுகள் அச்சத்திற்குள்ளாகியுள்ளன.

அபிவிருத்தியடைந்து வரும் தெற்கு நாடுகளைப் பொறுத்தமட்டில் உலக வர்த்தக அமைப்பு அதன் செயற்பாடுகள் என்பவற்றை உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் ஒன்றுபட்டு ஒரு அணியாக குரல் கொடுக்க முன்வந்துள்ளன. இவ்வாறாக - அனைத்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் ஒன்றிணைவது அவற்றின் பேரம் பேசும் திறனை அதிகரிக்க உதவும். இன்று சீனாவையும் உலக வர்த்தக அமைப்பில் சேர்த்துக் கொள்வதில் அமெரிக்க நிர்வாகம் வெற்றிகண்டுள்ளது. சீனச்சந்தை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு பெரியதொரு ஏற்றுமதிச் சந்தையாக விளங்கப் போகின்றது. அதேசமயம் - அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் சீனச்சந்தையை உள்ளடக்கியதாக, தம்மிடையே வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பிராந்திய ரீதியிலான ஒருங்கிணைப்புக் கூட்டுகள் மேலும் சிறப்பாக அமைய, பொருளாதார விடயங்களுகககு கூடுதல் கவனம் செலுத்தி செயற்படல் வேண்டும்.

இவ்வாறான, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகள் ஒவ்வொரு நாடும் வர்த்தகத்தினூடாக பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு பெருக்கம், வருமான அதிகரிப்பு என்பவற்றிற்கு வழிகோலும். மாறிவருகின்ற உலக வர்த்தகப் போக்கினை அவதானித்து, அதற்கேற்ற வகையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமக்கிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து ஒருமித்து குரல் எழுப்புவதன் மூலம், தமது நலன்களை பேணிப் பாதுகாப்பதுமல்லாமல் சில இடங்களில் நலன்களை உயர்த்திக்கொள்ளவும் முடியும். தற்போது இலத்திரனியல் வர்த்தகம் வளர்ந்து வருகின்றது. சர்வதேச மட்டத்திலான வர்த்தகத்தில் இலத்திரனியல் வர்த்தகம் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கப்போகின்றது. இதற்கும் வளர்ந்துவரும் நாடுகள் தயாராக இருக்க வேண்டும். இல்லையேல், இதனால் பெறக்கூடிய அனுகூலங்களும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே போய்ச் சேர்ந்துவிடலாம். வளர்ந்துவரும் தெற்கு நாடுகளின் ஒருங்கிணைப்பு, ஒன்றிணைந்த செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் வளர்ச்சியடைந்த நாடுகளின வர்த்தகப் பாதுகாப்புத் தடைகளை உடைத்து விரைவான முன்னேற்றத்திற்கான பாதையை உருவாக்க முடியும். ☆

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சுன்னாகம் | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| முருங்கக்காய் | 30/- | 40/- | 20/- | 30/- | 25/- | * | 20/- | 20/- |
| வெங்காயம் | 60/- | 50/- | 50/- | 50/- | 50/- | 50/- | 60/- | 60/- |
| பச்சைமிளகாய் | 60/- | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- |
| கத்தரிக்காய் | 60/- | 40/- | 30/- | 40/- | 40/- | 40/- | 40/- | 50/- |
| பாவற்காய் | * | 40/- | 40/- | 60/- | 40/- | 20/- | 60/- | 50/- |
| பயிற்றங்காய் | 40/- | 20/- | 20/- | 30/- | * | 20/- | 30/- | 30/- |
| வெண்டி | 30/- | 15/- | 15/- | 20/- | 15/- | 20/- | 20/- | 20/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 60/- | 70/- | 60/- | 60/- | 70/- | 60/- | 55/- |
| பீற்றூட் | 20/- | 10/- | 10/- | 10/- | 8/- | 10/- | 10/- | 10/- |
| கரட் | 40/- | 40/- | 15/- | 30/- | 50/- | 25/- | 30/- | 30 |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மக்களுக்கான நீதி ஒரு நல்ல அரசாங்கத்தின் செயலில் தான் தங்கியுள்ளது.*

*- ஆபிரகாம் லிங்கன் -*

# நமது நோக்கு

## காலந்தவறிய நீதி

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்காக - சட்ட ரீதியான நகர்வுகள் சற்று வேகம் கொண்டுள்ளன போலத் தோன்றுகின்றன.

கடந்த சில வாரங்களில் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, விடுதலையான நபர்களின் எண்ணிக்கை என்பவற்றை நோக்கும்போது இது தெரியவருகின்றது.

அதேவேளை -

கடந்த வாரம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றின் ஊடாக, இதுவரை காலமும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வலிமையானதொரு சாட்சியமாகக் கொள்ளப்பட்ட - குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மீதான நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன்,

- குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்ட வழிமுறைகள், அதற்கெனப் பயன்படுத்தப்பட்ட அழுத்தங்கள், வாக்குமூலங்களைப் பெற்றவர்களின் தகைமை போன்ற பல விடயங்களும் - இத்தீர்ப்பின் மூலம் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் வெளியுலகிற்கு உணர்த்தப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடூரத் தன்மையையும், நியாயம் மீறிய வகைகளில் அச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை - கடந்த காலங்களில் பலரும் சுட்டிக்காட்டியதையும், வாதிட்டமையையும்- இத்தீர்ப்பு வலுவானதாக்குகிறது.

தமிழ் மக்கள் மீது - எந்தவித மனிதாபிமானமற்ற வகையிலும், கண்மூடித்தனமாகவும், அப்பட்டமான இனவாதப் போக்கிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட- கைதுகளுக்கும், அதன் பின்னரான கொலைகளுக்கும், 'காணாமல் போன' சம்பவங்களுக்கும், வெளியுலகமே தெரியாத நீண்ட சிறைவாசங்களுக்கும், சித்திரவதைகளுக்கும் காரணமாகவும், துணையாகவும் - இருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சட்டபூர்வத்தன்மையை - இத்தீர்ப்பு கேள்விக்குறியாக்கியுள்ளது.

கைதான தமிழ் மக்கள் மீது - எழுந்தமானத்திற்கு சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரிலான வாக்குமூலங்களின் உண்மை நிலை கடந்தகாலங்களிலேயே அறியப்பட்டதொன்று என்றாலும், நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தற்போது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதானது, இவ்வளவு காலமும் தமிழ்மக்கள் மீது பாய்ந்த - மிலேச்சத்தனமான ஒரு சட்டத்தின் உள்முகத்தை வெளியுலகிற்கு உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தியிருக்கிறது.

இதேபோன்று - இக்கொடுஞ் சட்டத்தில் மற்றும் பல பிரச்சினைக்குரிய விடயங்களும் சட்டத்தின் வழியே வெளித்தெரியவரும் என்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையானது - பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாயத்தின் குரலை உலகிற்கு உரத்துச் சொல்லியிருப்பதுடன், கடந்த காலங்களில் நீதித்துறையும், நீதிமன்றங்களும் - எவ்வாறு பாரபட்சமாகவும், நியாயமின்றியும் செயற்பட்டிருக்கின்றன என்ற உண்மையையும் வெட்டவெளிச்சமாக்கியுள்ளது.

எனவே, இனிமேலாவது - முறையான நீதியும், பாரபட்சமின்மையும் நீதித்துறையிடமிருந்து தமிழ் மக்களுக்கு கிடைக்குமா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள சம்பந்தப்பட்டோர் ஆக்கபூர்வமாகச் செயற்படவேண்டும்.

அதன் மூலம் சிறைகளில் வாடும் எம் சகோதரர்களது தளைகள் அகற்றப்பட்டு அவர்கள் சுதந்திர மனிதர்களாகட்டும்.

உண்மையினதும் நியாயத்தினதும் வெற்றிகள் மனிதவதையை ஊக்குவித்த கொடுஞ் சட்டத்தை அகற்றிச் செல்லட்டும்.

# பொது இடங்களிலிருந்து ராணுவம் விலகினாலே யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை திரும்பும்!

## யாழ்.நிலவரம் பற்றி மாநகர முதல்வர் நோர்வே குழுவுக்கு அறிக்கை



நோர்வே உயர்மட்ட தூதுக்குழுவினருடன் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாநகர முதல்வர் செல்லன் கந்தையன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம், யாழ்ப்பாண நகரம் தொடர்பான நிலவர அறிக்கையொன்றைக் கையளித்துள்ளார்.

அந்நிலவர அறிக்கையின் சாராம்சத்தை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

❑ யாழ்ப்பாண நகரத்தைச் சேர்ந்த மக்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த அகதிகள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று சமாதானமான முறையில் சகல அடிப்படைத் தேவைகளுடனும் வாழுதல் முழுமையான அளவில் இன்னமும் சாத்தியமாகவில்லை.

❑ புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் சாதாரண மக்களுடைய வீடுகளிலும் கட்டடங்களிலும் இன்னமும் இராணுவத்தினர் தமது முகாம்களையும் அலுவலகங்களையும் அமைத்துள்ளனர். இதன் காரணமாக வீடுகள் மற்றும் கட்டடங்களின் சொந்தக்காரர்கள் அகதிமுகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தொடர்ந்தும் கஷ்டப்படுகின்றனர். போதிய சுகாதார வசதிகளின்றி அல்லற்படும் அவர்கள் சுத்தமான குடிநீரையும் சுத்தமான உணவு வகைகளையும் பெறுவதில் பெரும் இன்னலை அனுபவிக்கின்றனர். மக்களின் குடியிருப்புக்களிலிருந்து அரச படையினர் வெளியேறவேண்டும்.

❑ சுபாஸ் ஹோட்டல், அசோகா ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் ஆகியன யாழ்ப்பாண மாநகரத்தில் முன்னொரு காலத்தில் நன்றாக இயங்கிய ஹோட்டல்களாகும். இம்மூன்று ஹோட்டல்களில் இரண்டில் இராணுவமும், ஒன்றில் ஸ்ரீலங்கா பொலிஸும் நிலைகொண்டுள்ளன. முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது தங்குமிடமாகவும் கூட்டங்கள், மாநாடுகள் நடைபெறுமிடமாகவுமிருந்த இந்த ஹோட்டல்கள் இயங்க முடியாமல் உள்ளதால் - வருகை தரும் நிபுணர்கள், முக்கியஸ்தர்கள் பெரும் இடையூறுகளைச் சந்திக்கின்றனர். இந்த ஹோட்டல்களிலிருந்து அரசுப் படைகள் வெளியேற வேண்டும்

❑ புரிந்துணர்வு உடன்படிக்கை, போர் நிறுத்தம் என்பன ஏற்பட்ட பிறகும் பல முக்கியமான வீதிகளும் சந்திகளும் அரச படையினரால் மூடப்பட்ட நிலையில் உள்ளன. இதனால் பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றுக்குச் செல்லக் கூடிய இலகுவான வீதிகளைப் பயணஞ் செய்வதற்குப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன், நகரில் அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக பல விபத்துக்களுக்கும் இந்நடவடிக்கை இட்டுச் செல்கிறது. தேவையில்லாத வகையில் வீதிகளை மூடுதல், தடைகளை ஏற்படுத்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

❑ யாழ்.நகரிலுள்ள முக்கிய வர்த்தக நிலையங்கள், வங்கிகள், மத வழிபாட்டு இடங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், ஆகியவற்றுக்கு அருகாகவும், அவற்றைச் சுற்றியும் அரச படைகளின் காவலரண்கள், தடைகள் என்பன தொடர்ந்தும் நிறுவப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் பொதுமக்களுக்கு நெருக்கீடுகளை ஏற்படுத்துவதுடன் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும் பாதிக்கின்றன. முக்கியமாக யாழ்.போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள வீதிகள் முழுமையாக விடுவிக்கப்படல் வேண்டும்.

❑ யாழ்.நகரின் தெற்குப் புறமாகவுள்ள கடற்கரையை அண்மித்த கிராமங்களின் பல பகுதிகள் இன்னமும் அரசபடையினரால் முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்ட பகுதிகளாக உள்ளன. இதனால் அக்கிராம மக்களுக்குச் சொந்தமான குடியிருப்புக்களில் அவர்கள் வாழ்வது தடுக்கப்பட்டிருப்பதுடன் அவர்களின் ஜீவனோபாயத் தொழிலான மீன்பிடியை மேற்கொள்வதிலும் தீவிரமான மட்டுப்படுத்தல்கள் நிலவுகின்றன. இதனால் மீன்பிடித்தொழில் மற்றும் அதனுடன் தொடர்பான சிறுகைத்தொழில்கள் ஆகியவை மூலமான நகரப் பொருளாதாரம் மிகவும் பின்னடைந்துள்ளது. ஆகையினால் யாழ். நகரத்தின் கரையோரக் கிராமங்களிலிருந்து அரசபடை பூரணமாக அகன்று செல்லவேண்டும்.

❑ நகரிலுள்ள ஒரு சில இந்து மயானங்களும், கிறிஸ்தவ மயானங்களும் இன்னமும் படையினர் அனுமதிக்காத இடங்களாக உள்ளன. மக்கள் இறந்த தமது உறவுகளின் சாக்கடன்களையாவது சுதந்திரமாக ஆற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

சமாதானத் தீர்வைக் கொண்டுவருவதில் அரும்பணியாற்றுகின்ற நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும் அவரது உயர் மட்ட தூதுக் குழுவினரும் இவ்விடயங்களைத் தமது கருத்திலெடுத்து, சமாதானத்தை கட்டியெழுப்புவதன் ஒரு அம்சமாக, யாழ்ப்பாண நகர மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை இலங்கைப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் தெரிவிப்பதன் மூலம், அவற்றைத் தீர்க்கக்கூடியதாக அத்தலைவர்களைத் தூண்ட வேண்டும் என்று யாழ். மாநகர முதல்வரின் நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுடன் மாநகர முதல்வர் மாநாட்டில் உரையும் நிகழ்த்தினார்.

அந்த உரையில் - மாநகரசபையின் அபிவிருத்தி கட்டுமாணப் பணிகளுக்கு பெரும் நிதிப்பற்றாக்குறை நிலவுவதைத் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் A-9 வீதி போக்குவரத்துக்காக இருபத்துநான்கு மணி நேரமும் திறந்திருக்க வேண்டும் என வலியுறுத்திய கந்தையன், இவ்விடயங்களிலும் நோர்வே தூதுக் குழு கவனம் செலுத்தி உரிய இடங்களில் அவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# பாதுகாப்பற்ற பருத்தித்துறைச் சந்தை மரக்கறிகளை உண்ணும் கட்டாக்காலிகள்

(புலோலி)

பருத்தித்துறைச் சந்தை பாதுகாப்பற்றதாக இருப்பதால் கட்டாக்காலி ஆடு, மாடுகள் நுழைந்து தமது வியாபாரப் பொருட்களான மரக்கறிகளை உண்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தை முடிந்ததும் தாம் வைத்துவிட்டுப் போகும் மரக்கறிகளை - இரவில் சந்தையை உறைவிடமாகக் கொண்ட கட்டாக்காலி ஆடு, மாடுகள் உண்பதாகவும் இதைத் தடுக்க நகரசபை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதும் சந்தைக்குள் கட்டாக்காலிகள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (15)



# குறைதீர் மன்றம்

யாழ். இளவாலை கன்னியர் மடம் ம.வி.மாணவிகள் மானிப்பாய் முதல் மாதகல், பண்டதரிப்பு முதலிய இடங்களில் இருந்து கல்வி பயிலுவதற்காக இளவாலை வழி இலக்கம் 788 பேருந்தில் வழக்கமாகப் பயணம் செய்கின்றனர். இப்பேருந்து காலை 7.15 மணிக்கு யாழ்.நகரில் இருந்து புறப்பட்டு 8.10 மணிக்கு இளவாலையை வந்தடைகின்றது. இப்பேருந்தில் கிட்டத்தட்ட 75 மாணவிகளும் 5 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பயணம் செய்கின்றனர். அதே வேளை மாலை 2.30 மணிக்கு இளவாலைக்கு வரவேண்டிய பேருந்து அனேகமாக 4.30 மணிக்குத்தான் வருகின்றது. இதனால் பல கஷ்டங்களை எமது பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்நோக்குகின்றனர். ஆகவே, எமக்கும் 'பாடசாலை சேவை' எனப் பேருந்து ஒன்று ஒதுக்கப்படவேண்டியது அவசியமாகும். இதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆவன செய்யுமா?

அதிபர்
யா/இளவாலைக் கன்னியர்மடம்,
ம.வித்தியாலயம்,
இளவாலை.

***நமது ஈழநாடு :-***

தங்களது விடயம் தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்து சபையினருடன் நேரடியாக 'நமது ஈழநாடு' தொடர்பு கொண்டு கேட்டபோது - தங்களிடம் ஒவ்வொருநாளும் குறைந்தது 6 பேருந்துக்கள் வரை நடத்துநர்கள் மற்றும், சாரதிகள் இல்லாத காரணத்தால் சேவையில் ஈடுபடுத்த முடியாத துரதிர்ஷ்டத்தில் தாம் இருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர். அதேவேளை, தமக்குத் தேவையான பேருந்து நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை தேர்ந்தெடுப்பதற்காக நேர்முகத் தேர்வினை கடந்த மே மாதம் நடாத்திய கொழும்பிலுள்ள மத்திய போக்குவரத்து சபையினர், அந்நியமனங்களை வழங்குவதற்கான நிதியினை திறைசேரியிடமிருந்து பெறமுடியாததால் நியமனங்களை வழங்காதிருக்கின்றனர். மேலும் - வட இலங்கை போக்குவரத்து சபை இன்னும் மக்கள் மயப்படுத்தப்படவில்லை. எனவே எதற்கும் திறைசேரியை நம்பியிருக்க வேண்டிய நிலையில் தாம் இருப்பதாகவும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

மேலும் - தாங்கள் வழி இலக்கம் 788ஐத் விசேட கவனத்தில் வைத்திருப்பதாகவும் தெரிவித்த போக்குவரத்து சபையினர் - பல தடவைகள் சாரதிகள், நடத்துநர்கள் பற்றாக்குறை காரணமாக விடுவிப்பில் நிற்கும் சாரதிகள், நடத்துநர்களைக் கூட வீட்டிலிருந்து அழைத்து வந்து சேவையில் ஈடுபடுத்துவதாலேயே நேர தாமதங்கள் ஏற்படுவதாகவும், இதனாலேயே குறிப்பிட்ட நேரத்துக்கு 788 பாதையில் ஒழுங்காக காலக்கிரமத்தின்படி பஸ் சேவையை நடத்த முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தனர். புதிய சாரதிகள், நடத்துனர்கள் நியமிக்கப்பட்டதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பெரியவிளான் பாடசாலைக்குப் புதிய கட்டிடம்

(காங்கேசன்துறை)

பெரியவிளான் றோ.க. தமிழ் கலவன் பாடசாலையில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் - கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் பாடசாலையில் - மேலும் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த கால இராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிக்கப்பட்ட இப்பாடசாலை - மீள நிர்மாணிக்கப்பட்டு ஒரு சிறிய கட்டடத்துடன் மட்டுமே இதுவரை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், இப்பகுதியில் மீளக்குடியமரும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகிறது. (71)

### கசிப்பு உற்பத்தியாளருக்கு எச்சரிக்கை

(ஊரெழு)

ஊரெழு பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள், கசிப்பு ஒழிப்புக் குழுவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

கடந்தவாரம் ஊரெழு தெற்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூன்று குடும்பங்களை மேற்படி கசிப்பு ஒழிப்புக் குழு கையும் மெய்யுமாக பிடித்ததோடு, கசிப்பும் உற்பத்திக்குதவிய பரல் மற்றும் பாத்திரங்களும் அழிக்கப்பட்டன. அப்போதே, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.(96)

### மதகுகள் புனரமைப்பு

(காரைநகர்)

காரைநகர் சக்கலாவோடை பெரிய மதவடி, கிளுவனை வாய்க்கால் மதகுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்த 20 ஆண்டுகளிற்கு மேலாக திருத்தம் செய்யப்படாதிருந்த மதகுகள் - தற்போது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (52)

### உதவி அரச அதிபராக நியமனம்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு புதிய செயலராக யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக கடமை புரிந்த எஸ்.பேரானந்தம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக ஜே.எக்ஸ்.செல்வநாயகம் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.(51)

### வாதரவத்தையில் புதிய குளம்

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் புதிய குளம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் அனுசரணையோடும், மக்களின் பங்கேற்போடும் அமைக்கப்படும் இக்குளம் - உவர் நிலத்தினை நன் நிலம் ஆக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டு வருகின்றது.(110)

### நிறுவுனர் நாளும் பரிசளிப்பு விழாவும்

சுழிபுரம், காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நிறுவுனர் நாளும், பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப.2.00 மணிக்கு அதிபர் நா. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்குவார். பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தியும் ஜெயதேவி கணேசமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### பளையில் பனை நடுகை திட்டம்

அழிந்து வரும் பனை வளத்தை மீண்டும் பெருக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் பனை நடுகைத் திட்டம் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (80)

# முதலாம் கட்டப் பேச்சுகள் பற்றி கருத்துக் கணிப்புக்கு அரசு முடிவு!

## அமைச்சர் பீரிஸ் ஏற்பாடு



(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதலாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இம் மாதம் 26ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக்கருத்துக் கணிப்பை அரசியல் அமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கருத்துக் கணிப்புக்கான ஏற்பாடுகளை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கொண்டுள்ளார்.

இதன்படி - காலி, நுவரெலியா, மட்டக்களப்பு, கொழும்பு, இரத்தினபுரி, கம்பஹா, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5000 பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

# தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு நிலைமையை விளங்கப்படுத்துங்கள்!

## பல்கலை. மாணவர்கள் சொல்ஹெய்மிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்துக்கு நாங்கள் கொடுக்கக்கூடிய விலை என்ன? ஒத்துழைப்பு என்ன? என்பன சமாதானத்தின் மூலம் நாங்கள் என்ன பெற்றுக்கொள்ளப்போகிறோம் என்பதிலேயே தங்கியுள்ளது என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவிடம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள்



அடங்கிய குழுவினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நோர்வே குழுவினரின் யாழ். விஜயத்தின் இறுதி அம்சமாக இடம்பெற்ற - இக்கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுடன் நோர்வே பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

சுயநிர்ணயம், பாரம்பரிய தமிழர் தாயகம், தமிழினத்தின் தேசிய அந்தஸ்து ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுத்திட்டத்தை நோக்கி நகரும் சமாதான முயற்சிகளை, அது யாரால் மேற்கொள்ளப்பட்டாலும் நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம், அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயங்கமாட்டோம் என்று மாணவர்கள் நோர்வே உயர்மட்டத் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சந்திப்பில் - நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை தென்னிலங்கையின் அரசியல் சக்திகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள், கருத்துப்பரிமாறல்களில் ஈடுபட்டு நிலைமைகளை அவர்களுக்கு தெளிவுபடுத்தும்படி மாணவர்கள் வேண்டிக்கொண்டனர்.

ஐக்கிய தேசிய கட்சியினரோ பொதுஜன ஐக்கிய முன்னணியினரோ பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டு இருப்பதிலும் பார்க்க, ஜே.வி.பி. போன்ற சிங்கள தீவிரவாத சக்திகள் சம்பந்தப்படும்போது பிரச்சினைகள் மேலும் தீவிரமான சிக்கல் தன்மையை பெறுகின்றன என மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும் தற்போது - யாழ்.குடாநாட்டில் படையினர் மத்தியில் தாங்களும் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்ற ஆதங்கம் ஏற்பட்டுள்ளது. சமாதான காலத்தை தங்கள் குடும்பத்தினருடன் சந்தோசமாகக் களிக்கவே படையினர் விரும்புகின்றனர். தற்பொழுது சமாதான காலம் என்பதனால் படையினரை மக்கள் ஒரு பொருட்டாக மதித்து மிரளுவதில்லை. இதுவும் படையினர் மத்தியில் ஒரு காழ்ப்புணர்ச்சியையும் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. விரைவில் அரசாங்கப்படையினர் தங்கள் சொந்த வீடுகளுக்கு செல்லக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துங்கள் என்றும் மாணவர்கள் விதார் ஹெல்கிசனிடம் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு புன்னகைத்தபடி பதில் கொடுத்த ஹெல்கிசன் - அனைத்தும் சமாதான முயற்சிகளின் வெற்றியில் தங்கியுள்ளது என்றார். நோர்வே சமாதான முயற்சிகளில் எதுவரை தனது பணியை வழங்கும் என்றொரு கேள்வி மாணவர் மத்தியிலிருந்து எழுப்பப்பட்ட போது "நோர்வே சமாதானத்தை இங்கு நிறுவுவதில் தளராத முயற்சியை மேற்கொண்டுள்ளது. சிலவேளைகளில் சமாதானம் நோக்கிய நகர்வுகளில் எழுச்சிகளுடன் வீழ்ச்சிகளும் கூட ஏற்படலாம்.

ஆனால் - சமாதானத்தை அடைந்தே தீருவது என்பதில் நாங்கள் தளரமாட்டோம். ஆனால் எமது பங்களிப்பை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் காலமே எமது பங்களிப்பை தீர்மானிக்கும். இருதரப்பும் எதுவரை ஏற்றுக்கொள்கிறதோ அது வரைக்கும் உங்களுக்கு நிரந்தர சமாதானம் கிடைக்கும் வரைக்கும் நோர்வே சமாதானப்பணிகளில் தளராது ஈடுபடும்'' என்று விதார் ஹெல்கிசன் பதில் அளித்தார்.

# யுவதியுடன் சேட்டை விட்டவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்!

## கைதடியில் சம்பவம்

(கைதடி)

கடந்த திங்கட்கிழமை பகல் வேளையில் நாவற்குழியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைதடி பகுதியில் உள்ள யுவதி ஒருவரின் வீட்டிற்குள் உட்புகுந்து சேட்டை புரிய முற்பட்டவேளை அவ்விடத்தில் காணப்பட்ட இளைஞர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி நபர் எச்சரிக்கப்பட்ட பின் தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டார். இவருக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (31)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொல்லைகொடுத்த நாய்கள் அழிப்பு

(வலி.வடக்கு)

வலி.வடக்கில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நாய்கள் அதிகரித்துள்ளதால் அவை நஞ்சு ஊட்டி அழிக்கப்பட்டன.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக மல்லாகம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் அண்மைக் காலமாக கட்டாக்காலி நாய்கள் பெருகி பெரிதும் அசௌகரியத்தை ஏற்படுத்தி வந்தன.

மல்லாகம் பகுதிப் பொதுச் சுகாதார பரிசோதகர் என்.செந்தூரன் தலைமையில் சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்கள் - இம்முகாம்களுக்கு சென்று கட்டாக்காலி நாய்களை நஞ்சு ஊட்டி அழித்தனர். மல்லாகம் நீதவான் முகாமில் மட்டும் 40 நாய்கள் இவ்வாறு அழிக்கப்பட்டதுடன் ஏனைய முகாம்களிலும் காணப்பட்ட கட்டாக்காலி நாய்களும் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

நஞ்சூட்டி அழிக்கப்பட்ட நாய்களை வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்திப் புதைத்தனர். (105)

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் சிஹல உறுமயவுடன் இணைவு!

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய அரசியலில் ஈடுபட உள்ளதாகவும் 'சிஹல உறுமய'வில் இணைந்துகொள்ள இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த தினங்களில் பல கட்சிகள் தங்கள் கட்சிகளில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தும், தான் நாட்டு நலன் கருதி 'சிஹல உறுமய'வில் இணையவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# இந்துமாநாட்டு கருத்தரங்கிற்கு மாணவர்களும் பங்குபற்றலாம்!

(மானிப்பாய்)

இந்து சமய அலுவல்கள் அமைச்சு 2003ஆம் ஆண்டு மே மாதம் இந்து மாநாட்டினை நடத்தவுள்ளது. அம் மாநாட்டில் அறிஞர்கள் கலந்துகொள்ளும் உயர்மட்டக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இந்த மாநாட்டில் மாணவர்களின் நன்மைகருதி அவர்களுக்கு பயன்படக்கூடிய கருத்தரங்கு ஒன்றினையும் ஒழுங்கு செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் - பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள், தனியார் உயர் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களும் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (100)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சைவநெறித் தேர்வு 26 ஆம் திகதி

சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்டு வரும் சைவ நெறித் தேர்வு நாளைமறுநாள் 26ஆம்திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இத்தேர்வு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, சிலாபம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும். 402 தேர்வு நிலையங்களில் ஏறக்குறைய 72000 மாணவர்கள் இத்தேர்வுக்குத் தோற்றுகிறார்கள். தேர்வுக்குத் தோற்றும் பாடசாலைகளுக்கு சுட்டிலக்கம், கையொப்பப் பிரதி என்பன அனுப்பப்பட்டுள்ளதாக சைவ பரிபாலன சபை அறிவித்துள்ளது.

### ஆலயம் திருத்த ரூ.50 ஆயிரம் ஒதுக்கீடு

(நாவற்குழி)

மறவன்புலோ பகுதியில் உள்ள ஸ்ரீ வள்ளியம்மன் ஆலய திருத்த வேலைகளுக்காக 50 ஆயிரம் ரூபாவினை பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மக்கள் மீளக்குடியமராத பகுதியில் உள்ள ஆலயத்திற்கு சென்று வர ஆலய அறங்காவலர் ஒருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் - இவ்வாலய துப்பரவுப் பணியை மேற்கொள்ளப் பொதுமக்கள் சென்றுவர இராணுவத்தினரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. (29)

### பலப்படுத்தப்படும் ஊரெழு முகாம்

(ஊரெழு)

ஊரெழு இராணுவ முகாமை படையினர் பலப்படுத்தி வருகின்றனர். சுற்றிவர முட்கம்பி வேலிகளை அமைத்து வருவதுடன் காவல் அரண்களையும் வெள்ளம் புகாத வண்ணம் அமைத்து வருகின்றனர்.

ஏற்கனவே நிலக்கீழ் சுரங்கப் பாதைகளினூடு அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளை மென்மேலும் பலப்படுத்தி வருவதோடு இரவு வேளைகளில் காவல் கடமைகளையும் உஷார்படுத்தியுள்ளனர். (96)

### கால்நடைகளுக்கான புற் துண்டங்கள் விநியோகம்

(வடமராட்சி)

கால்நடைகளுக்கு உணவுக்காகப் பயன்படுத்தப்படும் புல்லினங்களின் வெட்டுத்துண்டங்கள் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன.

கினி, நேப்பியர், வயல் இனப் புற்களைப் பெற்று அவற்றினை வளர்ப்பதன் ஊடாக கால்நடைகளின் உணவுக்காக பயன்படுத்த முடியுமென கால்நடை வைத்திய அதிகாரி ஹரிகரன் தெரிவித்தார்.

அத்துடன் - நீர் நேப்பியர் இனத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் - 3 இனப்புல்லினங்கள் பொலனறுவை அரச பண்ணையிலிருந்து விரைவில் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### யூரியா விலை உயர்வு

(ஊரெழு)

யூரியா உரத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது. 500 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு அந்தர் உரம் தற்போது 650 ரூபாவாக உயர்ந்துள்ளது.

தற்போது - வயல் விதைப்புக்கள், விவசாயச் செய்கைகளுக்கு பெருமளவு உரம் பாவிக்கப்படும் நிலையில் திடீரென இவ்விலையேற்றம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (96)

### முருகையனின் நூல் வெளியீடு

முருகையனின் "உண்மை" நூல் வெளியீட்டு விழா வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழா கடந்த 20ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட "மானுடத்தின் தமிழ்க் கூடல்" நிகழ்வு காரணமாக பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச் சத்தத்துடன் கிபிர் வானில் வெடித்துச் சிதறியது!

## நேரில் கண்டவர் விபரிப்பு

(கொழும்பு)

துப்பாக்கியால் சுடப்படுவது போன்ற இரண்டு வெடிச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்தே வானத்தில் விமானம் வெடித்துச் சிதறியதைக் கண்டதாக நிக்கவரெட்டியவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலரான சோமபால அநுர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் குளியாப்பிட்டியப் பகுதியில் விமானப்படையின் கிபிர் ஜெட் விமானம் வெடித்துச் சிதறி வீழ்ந்தது தொடர்பாகத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



இந்த விமான விபத்தை நேரில் கண்ட இன்னொருவரான பிரதீப் குமார என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்- நான் மேல் மாடியிலுள்ள கடையில் இருந்தேன். அப்போது விமானம் ஒன்று பறந்து செல்வதைக் கண்டேன். திடீரெனச் சத்தம் கேட்டதாகவும் இந்த வேளையிலேயே விமானம் வெடித்துச் சிதறியது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த கிபிர் ஜெட் விமானம் பயிற்சியை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை 8.55 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டிருந்தது. இயந்திரக் கோளாறு காரணமாக 9.05 மணியளவில் வெடித்துச் சிதறி குளியாப்பிட்டியப்பகுதியில் வீழ்ந்தது.

3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இவ்விமானத்தின் சிதைவுகள் தென்னந் தோப்பில் வீழ்ந்தன. விமானி பரசூட் மூலம் குதித்து தென்னையில் சிக்கிய நிலையில் பொதுமக்களால் காப்பாற்றப் பட்டார்.

# இரத்தக்கறை படிந்த ஒரு மொழியைப் பேசுபவனாக நான் வெட்கப்படுகின்றேன்!

*தமிழ்க்கூடல் நிகழ்வில் 'சிங்களப் பத்திரிகைகளின் போக்கு' பற்றி உரையாற்றிய 'ஹிரு' சிங்களப் பத்திரிகை ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ரோஹித பாசன அபேவர்த்தனவின் உரை இது.*

*தமிழில்: சுவாமி.*

நான் ஒரு சிங்களவன். பொதுவாக மனிதர்கள் தமது தாய்மொழியால் கதைப்பது பற்றிப் பெருமையடைகிறார்கள். எனது தாய்மொழியைப் பற்றி அவ்வாறு நானும் பெருமையடைந்துள்ளேன். ஆனாலும் இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு அவ்வாறு பெருமையடைய முடியாது. எமது தாய்மொழி என்பது உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாற்றுடன் தொடர்புடைய இரத்தக்கறை படிந்த ஒரு ஆயுதமாகும்.

உங்களது மொழியைத் தெரியாத காரணத்தால், இரத்தக்கறை படிந்த இந்த ஆயுதத்தை உயர்த்தி, அழிக்கப்பட்ட இந்த நகரப் பூமியில் இருநது உங்களை நோக்கிக் கதைக்கக் கிடைத்தது பற்றி நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

யுத்தம் தொடர்பான செய்தி அறிக்கைகள் குறித்து அதாவது, மிகவும் தெளிவாகக் கூறினால் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக - ஒரு சிங்கள ஊடகவியலாளரின் அனுபவம் பற்றிக் கதைப்பதற்கு என்னை அழைத்துள்ளார்கள். என்னால் முன் வைக்கப்பட முடியுமான காரணங்களை மிகவும் சரியாகச் சொன்னால் - ஊடகவியலாளர் என்ற வகையினை விட ஒரு ஊடக அவதானிப்பாளர் என்ற ரீதியில் எனது அவதானிப்புக்களை கூற முடியும்.

அதற்கொரு காரணம் உண்டு. ஊடகத்துறை தொடர்பான எனது அனுபவங்கள் ஏறத்தாழ 10 வருடங்கள் என்ற சிறிய கால எல்லைக்குட்பட்டது. அந்தக் காலகட்டத்திலும் சம்பளம் பெறும் ஒரு தொழில் ரீதியான ஊடகவியலாளர் என்ற வகையில் நான் 4 வருடங்கள் மாத்திரம் செயற்பட்டுள்ளேன். எனவே எனக்கு எனது கருத்துக்களை தொழில் சார்ந்த மனோபாவங்களுடனும் ஒழுக்க விதிமுறைகளிலிருந்தும் விலகிக் கூற முடியும்.

யுத்தம் பெரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்று 20 வருடங்கள் ஆகியுள்ளது. இதில் பெரியளவில் என்ற அடைமொழியால் நான் கூறுவது என்னவென்று சுருக்கமாகவே தெளிவுபடுத்த வேண்டும். எமது கருத்தின்படி 20 வருடங்களுக்கு முன்பு கூட தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் நடைபெற்றது. இது தொடர்பான சர்வதேச உதாரணங்களில் இருந்து கூட கருத்து தெரிவிக்கலாம். கடந்த 4 தசாப்த காலகட்டத்தில் கியூபாவிறகு எதிரான அமெரிக்காவின் கோட்பாட்டை எடுத்துக் கொள்வோம். எமது தர்க்கத்தின்படி தற்பொழுது கூட கியூபாவிற்கு எதிராக அமெரிக்கா ஒரு பக்க யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆயினும் உலகில் யுத்தம் தொடர்பாக செய்திகளைப் பரப்பும் ஊடகங்கள் இந்த யுத்தம் தொடர்பாக ஒருபோதும் வெளியுலகத்துக்குக் கொண்டு வருவதில்லை.

1990ஆம் ஆண்டில் வளைகுடா யுத்தம் தொடங்கிய பிற்பாடு ஈராக்கிற்கு எதிராக பெரியளவிலான தாக்குதல் நடந்தது என்பது வெளிவரவில்லை. ஆயினும் அமெரிக்கப் பொருளாதாரத் தடை காரணமாக லட்சக்கணக்கான சிறுவர்கள் உட்பட ஈராக் மக்கள் கடந்த 6 - 7 வருடங்களில் மரணமடைந்துள்ளனர். இது ஈராக் மக்களுக்கு எதிரான ஒரு யுத்தமாகும்.

வியட்நாமைப் பாருங்கள். தற்பொழுது அமெரிக்க இராணுவம் வியட்நாமில் இல்லை. அமெரிக்கக் குண்டு வீச்சு விமானங்கள் வியட்நாம் வான் பரப்பில் பறந்தது தொடர்பான செயதிகள் தற்பொழுது இல்லை. ஆயினும் இதற்கு 30 வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் இரசாயனக் குண்டுத் தாக்குதல் காரணமாக வியட்நாமில் இன்னும் பல தலைமுறைகள் வேதனைப்பட வேண்டியுள்ளது. ஒரு பக்க யுத்தங்கள் என்பது இவையாகும் .

பெரியளவில் யுத்தம் தொடங்க முன் தமிழ்மக்களும் இவ்வாறான ஒரு பக்க யுத்தத்திற்கு முகம் கொடுத்தனர். பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது, மொழி உரிமை பறிக்கப்பட்டது, தொழில் செய்யும் உரிமைக்கு தடைகள் விதிக்கப்பட்டன, கல்வி கற்பதற்கு தடைகள் விதிக்கப்பட்டன, வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் ஒப்பந்தங்களும் மீண்டும் மீண்டும் மீறப்பட்டன, சாத்வீக முறையிலான எதிர்ப்பு நடவடிக்கைகள் நசுக்கப்பட்டன, சத்தியாக்கிரகம், உண்ணாவிரதங்கள் ஆகியவை துப்பாக்கிகளால் மௌனமாக்கப்பட்டன, நிராயுதபாணிகளான மக்கள் மீது கொலைகாரர் இனவாதத் தாக்குதலை நடத்தினர், சொத்துக்கள் சூறையாடப்பட்டன, வீடுகள் அழிக்கப்பட்டன, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடங்களில் இருந்து பலாத்காரமாக குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

காணாமற்போகும் நிகழ்வுகளும் படுகொலைகளும் 70களின் இறுதிக் கட்டத்தில் இருந்து ஆரம்பமானது. ஜனநாயக முறைப்படி தமது கருததை தெரிவிக்கும் உரிமை கூட 6ஆவது அரசமைப்புச் சீர்திருத்தச்சட்டம் மூலமாகப் பறிக்கப்பட்டது. இந்நிகழ்வுகள் நடக்கும்போது எவரும் ஒரு யுத்தம் பற்றிக் கதைக்கவில்லை. இவைகள் தொடர்பாக எந்தவொரு ஊடகத்திலும் "போர் நிலவரம்" வெளிவரவில்லை. ஆயினும் இது யுத்தம் அல்லவா? பெரியளவிலான யக்கமென நான் முன்பு கூறிய செயற்பாடு இந்த ஒருபக்க யுத்தத்திற்கு எதிரான தர்க்க ரீதியான மாற்று நடவடிக்கையாக ஆரம்பமானது.

நான் மீண்டும் எனது தலையங்கத்துடன் இணங்கிக் கூற விரும்புகிறேன். இந்த வரலாற்று நிகழ்வுகளை ஞாபகப்படுத்திக் கொண்டு ஊடகங்களும் யுத்தமும் பற்றிக் கதைக்க விரும்புகிறேன்.

தெற்கில் வாழும் மக்களில் எண்ணிக்கை அளவில் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட கருத்துள்ள குழுவைச் சார்ந்தவன் நான். தொலைக்காட்சி விவாதங்களின்போது தமிழ் மக்களின் பிரச்சினை என்ன என்பது பற்றி எமது புத்திஜீவிகள் கேட்கின்றனர். தமிழ் மக்களுக்குரிய பிரச்சினை என்பது அரை நூற்றாண்டு காலம் சென்றபோதும் இந்தக் கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்கும் நபர்கள்தான் என்று கூறப் பலருக்கு ஞாபகமின்றிப் போகும். இந்த யுத்தத்தால் 60,000 மக்கள் இறந்தார்கள் என உத்தியோகபூர்வமான தரவுகள் கூறுகின்றன.

இறந்த 60,000 மக்களும் சமூக, அரசியல் நெருக்கடி தொடர்பானவர்களே ஆகும். இக்கேள்விகளைக் கேட்பவர்கள் புத்திஜீவிகள் எனக் கருதப்படுகின்றனர். அவர்களே தமிழ மக்களுக்குப் பிரச்சினை என்பது எமது கருத்தாகும். நாங்கள் சிறிய எண்ணிக்கை கொண்டவர்கள் என கூறியதற்கு காரணமும் அதுதான்.

1993ஆம் ஆண்டில் நான் 'ஹிரு' பத்திரிகை சார்பில் மட்டக்களப்பிற்குச் சென்றேன். மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் தலைவர் ஹாரி மில்லர் (Harry miller) அடிகளாரையும் சந்திக்கச் சென்றேன். நான் தெற்கில் உள்ள பத்திரிகை சார்பில் வந்தேன் எனக் கூறியபோது, நீங்கள் சமீந்த பர்ணாந்துவா எனக் கேட்டார். நான் இல்லை எனக் கூறினேன். அப்படியானால் நீங்கள் ஐலண்ட் பத்திரிகை சார்பில் வந்தீர்களா என மீண்டும் கேட்டார். நான் இல்லை எனக் கூறினேன். எனக்கு அவருடைய அறைக்குள் செல்வதற்கு அதற்குப் பின்தான் அனுமதி கிடைத்தது.

தெற்கில்உள்ள ஊடகங்கள் தொடர்பாக வட-கிழக்கில் வாழும் மக்களின் அபிப்பிராயம் தொடர்பான முதல் அனுபவம் அந்நிகழ்வுடன் எனக்குக் கிடைத்தது

1993ஆம் ஆண்டிலிருந்து தற்பொழுது 9 வருடங்கள் சென்றுள்ளன. 'ஹிரு' பத்திரிகையின் கருத்துக்களும் பல மாற்றங்களை அடைந்துள்ளன.

*(நாளை தொடரும்)*

நேசன்

# எங்கே போகிறோம்...?

**பாரம்பரியம்... திருமணங்கள்... குடும்பவாழ்க்கை....**

அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ எத்தனையோ மாற்றங்களையும் திருப்பங்களையும் சந்தித்து வருகிறது நமது தேசம். அத்தகைய மாறுதல்கள் அந்தந்தத் துறை சார்ந்த தாக்கங்களைத் தோற்றுவிக்கின்றன. ஏனைய சமூக, வாழ்வியல் துறைகளிலும் அவற்றின் தாக்கங்கள் அவ்வப்போது ஏற்பட்டவண்ணம் உள்ளன.

இந்த விதமான நிகழ்வுகளுக்கு மத்தியிலும் அடிப்படையில் எவ்வித சலனமும் காணாமல் அதே பழைய இறுக்கத்தோடும் தீவிரத்தோடும் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வருகின்ற சில சமூக நடைமுறைகளும் பாரம்பரியங்களும் நம் மத்தியிலுண்டு. எந்தப் புற நிகழ்வுகளும் இந்த நடைமுறைகளில் எதுவித தளர்ச்சியையோ தளம்பலையோ ஏற்படுத்தவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு நிலையாகும்.

அத்தகைய ஒரு நடைமுறை தான் எமது சமூகத்தில் நிலவி வருகின்ற திருமண நடவடிக்கைகள். திருமணம் ~ குடும்பம் ~ வாழ்க்கை என்கின்ற விக்ஷயங்கள் எமது சமுதாயத்தில் கவனத்திலெடுத்துக் கொள்ளப்படுகின்ற விதமே வித்தியாசமானது தான். சாதாரணமாக திருமண வயதை அடைந்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தை நடாத்தி வைக்க 'மூத்தவர்'கள் முனையும்போது என்னென்ன விஷயங்களுக்கு முதலிடமும கணபபுமு தருகறாாகள எனபதைக கவனததால பல சநதாபபஙகளல அதாசசயே தோன்றுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்க்கைக்காக இணை சேர்க்கப்படுதல் என்ற மகுடத்தோடு நடைபெறும் இந்தச் சடங்கில் அவர்களின் வாழ்க்கை சிறப்புறுதல் என்னும் மைய நோக்கம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறது என்பது ஒரு கேள்வி. பொருத்தம் பார்த்தல், சாத்திர வழி முறைகளைப் பின்பற்றுதல் என்பதெல்லாம் ஒருபுறமிருக்க எல்லாப் பொருத்தப்பாடுகளையும் பொருத்தமின்மைகளையும் தாண்டி ஒரு பேருண்மை இருக்கிறது.

'பொருளாதார நலம்' என்னும் விடயம் எல்லாவற்றையும் பின் தள்ளி விட்டு, முடிவான தீர்மானத்தை எடுக்க உதவுகின்ற ஒரு பிரதான காரணியாய் ஆகி விடுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் கவனித்துள்ளோம், கவனித்தும் வருகிறோம். அதுதான் அந்த உண்மை.

'சீதனம்' என்னும் பெயரில் இருவரது தனிப்பட்ட வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பிரதான பொருளியல் காரணி இருப்பதும் இல்லாதுபோவதும் இரண்டாம் பட்சமாகிவிட வசதிகள் ~ வீடு ~ வாசல் ~ சில இலட்ச ரூபாய்கள் இவையே வாழ்வை முடிவு செய்யும் பொறுப்பை ஏற்கின்றன.

பேச்சுக்கால் சரிவர வேண்டுமென்பதற்காக சாதகத்தையே மாற்றி எழுதிவிடுபவர்களும் பொய்யான சாதகக் குறிப்பை ஒப்படைப்பவர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள். இவர்களது இத்தகைய நடவடிக்கைகள் பின்னர் பெரிய துயரங்களாய் விளைந்து நிற்பதையும் நாம் பார்த்து வருகிறோம்.

பொருத்தம் பார்ப்பவர்களின் கதை தான் அப்படி இப்படியான சம்பிரதாயங்களையே கணக்கில் எடுத்துக் கொள்ளாதவர்களது குடும்பம் வெற்றியடையவதும் வாழ்க்கை சிறப்பதும் எதைப் பொறுத்து அமைகிறது?

அண்மையில் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த பெண்மணி கூறிய கருத்து ஞாபகத்துக்கு வருகிறது. 'நாங்கள் பொருத்தம் பார்ப்பதோ சாதகம் பார்ப்பதோ இல்லை. இரண்டு பகுதிக்கும் பிடித்திருந்தால், ஒத்துப் போனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆளைஆள் பிடித்துக்கொண்டால் கலியாணம் செய்து வைக்கிறோம். பிறகு குடும்பம் சிறக்கிறதும், தழைக்கிறதும் அவரவர் போக்குகளைப் பொறுத்து அமைகிறது'.

சாதகம் பார்ப்பது, சீதனம் பேசுவது என்கிற விஷயங்களைப் பின் தள்ளிவிட்டு மனப்பொருத்தம் என்பதற்கு முன்னிடம் கொடுத்து இணைக்கப்படும் தம்பதிகள் பெருமளவில் சிறந்து வாழ்வதை நாம் அவதானித்ததில்லையா?

காதல் திருமணங்கள் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெறுகின்றன என்பதும் இல்லை. வருஷக்கணக்காகக் காதலித்துவிட்டு மண முடித்து ஒரு சில வருடங்களுக்குள் மனமுறிவும் மணமுறிவும் ஆகிவிடுபவர்களும் நம்மத்தியில் இருக்கத்தானே செய்கிறார்கள்.

காதல் மணமோ, பெரியவர்கள் ஏற்பாட்டில் நடக்கும் திருமணமோ எதுவானாலும் சம்பந்தப்படுபவர்களின் மன நோக்குகள் ஒத்திருப்பது முக்கியமல்லவா? புறத்தோற்றக் கவர்ச்சியை மட்டும் வைத்துக்கொண்டு குடும்ப வாழ்வை முடிவு செய்வதும் பல சந்தர்ப்பங்களில் தோல்வியாக முடிவடைவதைத்தான் நாம் பார்க்கிறோம்.

இந்த நிலையில் நாம் இத்தனை காலமும் கைக்கொண்டுவந்த திருமணத்தை முடிவு செய்யும் அனைத்துக் காரணிகளையும் மறுபரீசீலனை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இன்றெல்லாம் அடிக்கடி குடும்ப வாழ்க்கை கலைந்து போவதும் கணவன் மனைவி உறவுகள் முறிந்து போவதும் பல இடங்களில் நிகழ்வது சர்வ சாதாரணமாகிவிட்டது. மேற்குலக நாடுகளாயிருந்தால் விவாகரத்து என்ற ஒன்றின் மூலம் தீர்வை நாடும் நிலை தோன்றியிருக்கும். பாரம்பரியம் ~ கலாசாரம் என்றெல்லாம் எமது கீழைத்தேச மரபுகள் இன்றும் எம் மத்தியில் இருப்பதால் மேலைத்தேசத்தவர்கள் போல நமது மண்ணில் எடுத்த எடுப்பில் விவாகரத்து என்ற மட்டத்துக்குப் போவதில்லை. ஆனாலும் ஒரு விஷயம், கணவன் மனைவி ஆகிய இருவரும் முரண்படுகின்ற நிலை எங்கும் தோன்றத்தான் செய்கிறது. இதற்கான காரணத்தை நாம் பார்க்கவேண்டும். திருமணத்தை முடிவு செய்யும்போது ~ சீதனம் ~ பொருள் ~ சொத்து ~ நிலபுலம் என்பவற்றைக் கவனத்திலெடுக்கும் எம்மவர்கள் சம்பந்தப்பட்ட இரண்டுபேரும் ஒத்தியங்கும் இயல்பு உடையவர்களா? அவர்களின் பின்னணி ~ பார்வைகள் ~ அணுகுமுறைகள். ~ மன இயல்புகள் ஒன்றோடு ஒன்று இணங்கிப்போகுமா ~என்கின்ற விடயங்களை முதலிடம் கொடுத்துக் கவனிக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அனுசரித்து போவார்களா என்பதையாவது பார்க்க வேண்டும்.

இந்த விஷயங்களில் சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் விழிப்புடன் செயற்பட வேண்டும். வெறுமே 'பிடித்திருக்கிறது' என்று மேலோட்டமாக முடிவெடுப்பது உதவாது. முடிவு செய்கிற பொறுப்பைப் பெரியவர்களிடம் விட்டுவிட்டு ~ வாழ்கிற காரியத்தை நாங்கள் பார்ப்போம் என்று மற்ற விக்ஷயங்களைக் கவனத்திலெடுடப்பதால் தான் பிரச்சினையே வருகிறது. வாழப்போகிறவர்கள் யாரோ அவர்கள் மிகவும் பொறுப்போடு அக்கறையாகச் சிந்திக்க வேண்டும். திருமணம் என்பது இரண்டு பேருடைய வாழ்க்கையின் ஆரம்பம். அந்த இரண்டு பேருடைய விருப்பு வெறுப்புகள் பிடிக்கும் ~ பிடிக்காதவைகள் இவையெல்லாம் மிகமிகக் கவனத்தோடு கணக்கிலெடுக்கப்பட வேண்டும். இதைவிடுத்து, வியாபார ஒப்பம்போல திருமண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நமது பெரியவர்களும் நாமும் எங்கே தான் போகின்றோம்?

**மீண்டும் சந்திப்போம்...**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கைத்துப்பாக்கியுடன் பிடிபட்டவர் நெல்லியடி கொலையுடன் சம்பந்தம்

அண்மையில் வீரசிங்கம் மண்டபம் அருகில் கைத்துப்பாக்கியுடன் கைதான புளொட் உறுப்பினர் மீது பருத்தித்துறை நீதவான் நீதிமன்றமும் ஏற்கனவே பிடியாணை பிறப்பித்திருப்பதாக நேற்று யாழ். நீதிமன்றில் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி நபர் சில ஆண்டுகளுக்கு முன்பு நெல்லியடியில் இடம்பெற்ற கொலை ஒன்றுடன் சம்பந்தப்பட்டிருந்ததாகவும், கொலையுண்டவரின் தலையை யாழ். நகருக்கு எடுத்து வந்து எறிந்து விட்டுச் சென்றவர் எனக் கருதப்படுவதாகவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த மேற்படி நபரை - எதிர்வரும் 6ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். முன்னதாக இவர் கைத்துப்பாக்கியை வைத்திருக்க இராணுவ கட்டளை அதிகாரி ஒருவரே அனுமதியளித்திருந்ததாக பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

## அடுத்த...

அடேல் பாலசிங்கம், சட்டவல்லுநர் வி.உருத்திரகுமார் ஆகியோருடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தைக்காக வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேரடியாக தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க,லி)

## கண்காணிப்பு...

தனியே இவ்வாறான மீறல்களை அவதானித்து அறிக்கை செய்வதற்கு மட்டுமே இவர்களுக்கு அதிகாரம் உள்ளது. எனவே யுத்த நிறுத்த மீறல்களை நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய அதிகாரங்களைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு வழங்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரச தரப்பினருடனும் கலந்துரையாடத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (க,லி)

## நோர்வே...

கிளிநொச்சியிலிருந்து ஏ9 வீதி வழியாக நோர்வேயின் சமாதானக் குழுவினர் நேற்று மாலை 4.45 மணியளவில் கொழும்புக்குத் திரும்பினர்.

நேற்று மாலை ஜனாதிபதியுடனான சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதையடுத்து மாலை 5.30 மணியளவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதானச் செயலணியின் செயலாளர் பேணாட் குணதிலக ஆகியோரைச் சந்தித்து நோர்வேக் குழுவினர் பேச்சுக்களை நடத்தினர்.

## நோர்வே குழு...

நுகேகொடவில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்தமையாலும் வேலைப்பளு காரணமாகவும் நோர்வேத் தூதுக்குழுவைச் சந்திக்க முடியவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி மத்தியில் நோர்வேயின் தலையீடுகள் குறித்து அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் நோர்வே சமாதான ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து தென்னிலங்கை அபிவிருத்தியில் தலையீடு செய்யுமளவுக்கு வந்துள்ளதாகக் கருத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## நேற்றைய சந்திப்பை...

நேற்றுமுன்தினம் மாலையே யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குச் சென்றடைந்த நோர்வே தூதுக் குழுவினர் மிகவும் பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு கிளிநொச்சி நகரை ஊடறுத்துச் செல்லும் ஏ-9 கண்டி வீதிப் பகுதியில் காவல்நிலைகள் அமைக்கப்பட்டு வீதிப் போக்குவரத்துக்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதனால் நண்பகல்வரை இவ் வீதியூடான போக்குவரத்துக்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டிருந்தன.

வீதியின் இருமருங்கிலும் தமிழீழ காவல்துறையினர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கென நூற்றுக்கணக்கான காவல் துறையினர் விசேடமாக அழைக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மேலும் - தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியற்துறை நடுவப் பணியகத்திற்குச் செல்கின்ற அனைத்து வீதிகளிலும், வீதிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு அவ் வீதிகளிலும் காவல் துறையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நடுவப் பணியகத் தைச் சூழ பல பாதுகாப்பு வளையங்கள் அமைக்கப்பட்டு உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

நண்பகல் வரை நீடித்த மேற்படி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடுவப் பணியகத்தில் நோர்வே தூதுக் குழுவினருக்கு மதியபோசனம் வழங்கப்பட்டது.

மதியபோசனத்தைத தொடர்ந்து நோர்வே தூதுக்குழுவினர் தமது வாகனங்களில் கண்டி வீதியூடாக வவுனியா நோக்கிச் சென்றனர். இவர்கள் கண்டி வீதியூடாகச் சென்றபோது பயணத்திற்காகக் காத்திருந்த மக்கள் கைகளை அசைத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இவர்கள் ஓமந்தை நகரைச் சென்றடையும்வரை தமிழீழக் காவல் துறையினரின் விசேட மோட்டார் சைக்கிள் குழுவினர் பாதுகாப்பு வழங்கியவாறு சென்றனர்.

## பிரபாகரன் - நோர்வே.....

புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அமைக்கப்படவிருக்கும் கூட்டுச் செயலணிக்குழுவின் கட்டமைப்புத் தொடர்பாகவும், அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் மிகவும் ஆழமாக ஆராயப்பட்டது. விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்தும் அரச தரப்பிலிருந்தும் மேற்படி செயலணிக்கு யார் யாரை நியமித்துக் கொள்வது என்பது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இக்கூட்டுச் செயலணிக் குழுவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அரச தரப்பிலிருந்து அமைச்சர் ஜி.எல். பீரிஸும் பிரதிநிதித்துவப்படுவார்கள் என்றும் இவர்களை விட மேலும் சில உறுப்பினர்கள் இரு தரப்பிலிருந்தும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இக்குழுவின் நிர்வாகக் கட்டமைப்பு, எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் நேற்றைய பேச்சுக்களின்போது எடுத்துக் கூறப்பட்டன.

மேலும் - அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக சர்வதேச நிதி மூலங்களிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், இந்நிதியை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இவ் விடயத்தில் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருடைய கருத்துக்களும் சுமுகமாக, ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்திருந்தன. வடக்கு, கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய சில மாவட்டங்களிலும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது - யாழ்.குடாநாட்டில் படையினரால் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்ற பிரதேசங்கள் குறித்து விடுதலைப் புலிகளால் பிரஸ்தாபிக்கப்பட்டது. மக்களின் வாழ்விடங்களை, உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத விடயம் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் உடனடியாக மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இதன் மூலம்தான் யாழ். குடாநாட்டில மக்களின் மீள் குடியேற்றத்தை முழுமையாக ஏற்படுத்தலாம் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வட-கிழக்கில் மக்களின் வாழ்வில் இயல்புநிலையை மேலும் வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதற்காக அரச தரப்பு பல்வேறு நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி ஆரம்பிக்க வேண்டும் என்றும் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இவற்றைவிட ஆயுதப் படையினரின், குறிப்பாக - கடற்படையினரின் கெடுபிடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடிவடிக்கைகளை அரச தரப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் கடலில் சுதந்திரமாக கடற்தொழில் செய்வதற்கும், கட்டுப்பாடற்ற வகையில் புலிகளின் கடற் போக்குவரத்திற்கும் வழிவகை செய்யவேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், விடுதலைப் புலிகளின் தளபதிகள் - போக்குவரத்தின்போது சுயபாதுகாப்புக் கருதி ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் புலிகள் தரப்பால் கோரப்பட்டது.

இவற்றைவிட - திருமலையிலும் காஞ்சிரங்குடாவிலும் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கடும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

# விளாம்பழம் பறித்த சிறுவன் மிதிவெடியில் சிக்கிக் காயம்

(வடமராட்சி)

விளாம்பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மிதிவெடியில் சிக்கி இரு காலிலும் பலத்தகாயம் அடைந்த சம்பவம் ஒன்று நேற்றுமாலை 2.30 மணியளவில் கரவெட்டியில் நடைபெற்றுள்ளது.

கரவெட்டி அரசடிப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஸ்ரெளியல் (9) எனும் சிறுவன் வீட்டுக்கு அருகில் உள்ள காணிக்குள் விளாம் பழம் பறிக்கச் சென்ற வேளை இவ்வாறு மிதிவெடியில் சிக்கியுள்ளார். (23) (17)

# கிபிர் விமானங்களின் பறப்பு இடைநிறுத்தம்

(கொழும்பு நிருபர்)

குளியாப்பிட்டியவில் நேற்று முன்தினம் கிபிர் விமானம் விபத்துக்குள்ளானதையடுத்து கிபிர் விமானங்களைச் சேவையில் இருந்து இடைநிறுத்தி வைக்குமாறு விமானப் படைத் தலைமையகம் உத்தரவிட்டிருக்கின்றது.

அத்துடன் விமானம் விபத்துக்குள்ளாகி சிதைவுகள் வீழ்ந்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் விமானப்படையினரும், பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்விபத்து தொடர்பாக ஆராய்வதற்காக இஸ்ரேலில் இருந்து விசாரணைக்குழுவொன்று வரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (01)

# பலாலி விமானத் தள விஸ்தரிப்பு இந்தியாவுடன் கூட்டு ஒப்பந்தம்

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கு இந்தியாவுடன் இலங்கை ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவுள்ளது.

பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து அதன் வசதிகளை அதிகரிப்பதற்கே இவ்ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்திய- இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் ஒரு கட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படும். இவ் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானநிலையத்தை 100சதுர கிலோமீற்றர் பரப்பளவில் விஸ்தரித்தல், நவீன ராடர் வசதிகளை ஏற்படுத்துதல் என்பன இதன் முக்கிய திட்டங்களாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (1)

# மிருசுவில் கொலை வழக்கு ஞாயிறன்று கொழும்பில்

மிருசுவிலில் எட்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று புதைத்ததாக இராணுவத்தினர் ஐவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் 27ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசேட அமர்வாக நடைபெறவுள்ளது.

நீதிபதிகள் எஸ். ஐ. இமாம், சரத் அம்பேபிட்டிய, குமார எக்கரட்ண ஆகியோர் இந்த வழக்கை விசாரிக்கவுள்ளனர். இதற்கான அழைப்பாணை ஏற்கனவே ஐந்து அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்து வயோதிபர் ஸ்தலத்தில் பலி

வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரி முன்பாக நேற்றிரவு நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

நேற்றிரவு எட்டு மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் கந்தையா மயில்வாகனம் (80) என்பவரே மரணமானவராவார்.

இவரின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை

நல்ல நிலையில் - சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (ஆவணங்களுடன்) நமது ஈழநாடு அலுவலகத்துக்கு நேரில் வரவும். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நிர்வாக இயக்குநர்,
'நமது ஈழநாடு'

மரண அறிவித்தல்களுக்கு 40 வீத விசேட கழிவு வழங்கப்படும்

நமது ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்களுக்கு - விளம்பரக் கட்டணங்களில் 40 சதவீத விசேட கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

- பொது முகாமையாளர் -

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.97 | 96.48 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 147.84 | 149.13 |
| 1 யூரோ | 93.45 | 94.46 |
| 1 சுவிஸ் பிராங் | 63.60 | 66.41 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 52.75 | 53.37 |
| 1 ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1 சவூதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.